விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email.Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 22 சனிக்கிழமை (08.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354

## இரணைமடு நீர்த்தேக்கம் ஜனாதிபதியால் திறப்பு



03

## அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் ஒரேவழி - கபே அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

நடைமுறையில் ஏற்பட்டுள்ள அரசியலமைப்பு மற்றும் அரசியல் பிரச்சினைக்கு தீர்வைக்காண ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒருங்கே ஒரே நாளில் விரைவில் நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

சுதந்திரமானதும் நியாயமானது மான தேர்தல் அமைப்பான கபே இந்தக் கோரிக்கை விடுத்துள்ளது.

கபேயின் நிறைவேற்று பணிப் பாளர் கீர்த்தி தென்னக்கோன் இந்தக்கோரிக்கையை விடுத்துள் ளார்.

எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதியன்று நான்கு வருடங்கள் நிறைவடையும் நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி தேர்தலை நடத்தும் 23

## அரசியல் நெருக்கடியை புரிந்து கொண்டு

# மகிந்த தாமாகவே பதவி விலக வேண்டும்

## அமெரிக்க முன்னாள் தூதுவர் றொபேர்ட் பிளேக் தெரிவிப்பு



(கொழும்பு) நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடியை புரிந்து கொண்டு மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து தாமாகவே பதவி விலகுவதே சிறந்தது என இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவரும் தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க அமைச்சருமான றொபேர்ட் பிளேக் தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க...)

## ஹெரோயினை நீதிமன்றத்தில் கைமாற்றியவர் வசமாக சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற திறந்த மன்றில் கைதி ஒருவருக்கு ஹெரோயின் போதைப்பொருளைக் கைமாற்றிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்றதாகவும் அவர் தற்போது யாழ் பொலிஸாரிடம் ஒப்படைக் 23

## வர்த்தக நிலையம் உடைத்து திருட்டு

### மோப்பநாயிடம் தப்பிக்க மிளகாய்த் தூள் வீச்சு

(கரணவாய்)

உடுப்பிட்டி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தொலைக்காட்சி பெட்டி, ஒரு தொகை பணத்தினை திருடிச் சென்றுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 24

## உச்சநீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொள்ளத் தயார்

### மகிந்த அணியினர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவதாக மகிந்த தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை நான்காவது நாளாகவும் நேற்று நடைபெற்றது.

இதன்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதி 23

## இரணைமடுவில் சிறீதரன் எம்.பி

### நிகழ்வை புறக்கணித்து மக்களோடு நின்றார்

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்தின் வான் கதவினை திறந்து வைத்து அபிவிருத்தி செய்யப்பட்டபின் குளத்தினை விவசாயிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். ஆனால் குறித்த 23

## நாடாளுமன்ற கலைப்புக்கு எதிரான விசாரணை நிறைவு

### தீர்ப்பு வரும்வரை தடை நீடிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பாராளுமன்றத்தை கலைக்கும் வகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை இடைக்கால தடையுத்தரவு அமுலில் இருக்கும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 10 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீது நேற்று 4-வது நாளாகவும் விசாரணைகள் இடம்பெற்றது.

ஏற்கெனவே உயர் நீதிமன்றினால் குறித்த மனுக்களை 02

## கழுத்தில் கத்தி வைத்து பணம், நகை கொள்ளை

### உடுப்பிட்டியில் சம்பவம்

(கரணவாய்)

கத்தியை கழுத்தில் வைத்து அச்சுறுத்தி தங்கநகை, பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி கட்டைப்புளியடி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு உட்புகுந்த கொள்ளையர்கள் நால்வர் வீட்டில் இருந்தவர்களின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி அவர்களிடம் இருந்த ஐந்து இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க 23

## யாழ். மாநகர சபையின் பட்ஜெட் தோற்கடிப்பு

### சபையில் காரசார விவாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையின் அமர்வு நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றது. இதன் போது யாழ். மாநகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் சபையில் சமர்ப்பித்தார்.

மக்களின் அபிவிருத்தித் திட்டங்கள் உள்வாங் 23

## 19–வது திருத்த சட்டத்தில் கைவைக்க அனுமதியோம்

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19-வது திருத்தச் சட்டத்தை மேலும் திருத்தத்துக்கு உள்ளாக்க, ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான போராட்டத்தில் தாம் தொடர்ந்தும் முன்நிற்பதாகவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

19ஆவது திருத்தச் சட்டத்தில் குறைபாடுகள் இருந்தால், அதில் திருத்தங்களைச் செய்வதற்கு தயாராக 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சுன்னாகத்திலும்...

DMI
Jaffna

A/L
# வர்த்தகப் பிரிவு ⇨ ✓
# கலைப்பிரிவு ⇨ ?
# தொழில்நுட்பபிரிவு ⇨ ??

இடம், காலம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு :
official facebook
DMI Daniel (C-4642)

# நாடாளுமன்றக்...

விசாரணை செய்ய நிர்ணயிக்கப்பட்ட மூன்று நாட்களும் நேற்று முன்தினம் நிறைவடைந்தபோதும் விசாரணைகள் நிறைவடையாததால் நேற்று நான்காம் நாளாகவும் விசாரணைகள் தொடர் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இந்நிலையிலேயே குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணைகள் நேற்று நிறைவடைந்த நிலையிலேயே, தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை இடைக்காலத் தடையுத்தரவு அமுலில் இருக்கும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் நலின் பெரேராவின் கீழ் பிரியந்த ஜயவர்தன, பிரசன்ன ஜயவர்தன, புவனேக அலுவிஹார, விஜித் மலல்கொட, சிசிரடி ஆப்று, முர்து பெர்ணான்டோ ஆகிய எழுவர் கொண்ட நீதியரசர்கள் குழாமினால் இம்மனுக்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. (ம)

ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில்,
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்...
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்)
(திங்கள், செவ்வாய், - வவுனியா) (C-4645)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்


றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (7823)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயவாணி சிவபாதசுந்தரம்



அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயவாணி சிவபாதசுந்தரம் 05.12.2018 புதன்கிழமை அதிகாலை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் - அன்னம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சந்தோசலட்சுமி தம்பதியரின் மருமகளும், சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், வனஜா (ஓய்வுநிலை அதிபர்), வசந்தா (லண்டன்), சிறிகாந்தன் (லண்டன்), ஜெயகாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தங்கையும், சண்முகானந்தன் (ஓய்வுநிலை படவரைஞர்), செல்வநாயகம் (லண்டன்), கிரிஜா (லண்டன்), கிருபா (லண்டன்), ஆகியோரதும் சாரதாதேவி (லண்டன்), விஜயதேவி (லண்டன்), ஜீவதேவி (லண்டன்), தவநேசன் (லண்டன்), அம்பிகாதேவி (லண்டன்), சுஜிதாதேவி (லண்டன்) ஆகியோரதும் அன்பு மைத்துனியும், ஆர்த்தி, திவ்யா ஆகியோரின் அருமைச் சிறியதாயாரும், அருண், அர்ச்சனா, பிரணவன், பிரவீனன், பிருந்தா ஆகியோரின் அன்பு அத்தையும், அன்னசோதி (ஓய்வு நிலை ஆசிரியை), தங்கம் ஆகியோரின் உடன் பிறவா அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 10.12.2018 (திங்கட்கிழமை) லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

18-4/2, பரகும்பா பிளேஸ்
கொழும்பு - 06
(C-4643)

குடும்பத்தினர்
தகவல் : நா.சண்முகானந்தன்

# சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம்

**01.01.2019 முதல் 31.12.2019 வரை மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சிய அறைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2019**

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 10.12.2018 - 20.12.2018 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 21.12.2018 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 21.12.2018 மு.ப 10.30 மணி

## மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | கச்சாய் உப அலுவலகம் | | | |
| 01 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 832,500.00 | 8,300.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 70,400.00 | 700.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 60,500.00 | 600.00 | 750.00 |
| 04 | களஞ்சிய அறை இல - 01 | 32,800.00 | 500.00 | 750.00 |
| 05 | களஞ்சிய அறை இல - 02 | 31,200.00 | 500.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 14,900.00 | 500.00 | 750.00 |
| 07 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 14,900.00 | 500.00 | 750.00 |
| | வரணி உப அலுவலகம் | | | |
| 08 | வரணி பொதுச்சந்தை | 101,900.00 | 1,000.00 | 750.00 |
| 09 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 7,000.00 | 500.00 | 750.00 |
| | கைதடி உப அலுவலகம் | | | |
| 10 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 169,800.00 | 1,700.00 | 750.00 |
| | மிருசுவில் உப அலுவலகம் | | | |
| 11 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 290,700.00 | 2,900.00 | 750.00 |
| 12 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 55,100.00 | 600.00 | 750.00 |
| 13 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 39,600.00 | 500.00 | 750.00 |
| 14 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,500.00 | 500.00 | 750.00 |
| 15 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 4,900.00 | 500.00 | 750.00 |

## நிபந்தனைகள் :

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த **10.12.2018** தொடக்கம் **20.12.2018** வரை யான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.

2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.

3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

4. **21.12.2018** ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.

6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.

9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
08.12.2018
(C-4636)


# ஜனாதிபதி மைத்திரி இரணைமடுவுக்கு விஜயம்












(படங்கள்:- பரந்தன், கண்டாவளை செய்தியாளர்கள்)





(கண்டாவளை)

கிளிநொச்சியில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரணைமடுக் குளத்தின் ஒரு வான் கதவை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2 ஆயிரத்து 178 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட குளத்தின் பெயர் கல்வெட்டைத் திறந்து வைத்ததோடு, இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளன செயலாளர் முத்து சிவமோகனிடம் இரணைமடுக்குளத்தின் ஆவணத்தையும் கையளித்துள்ளார்.

மேலும் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட பொங்கல் நிகழ்வையும் அரிசியிட்டு ஆரம்பித்து வைத்தார்.

இரணைமடுக்குளத்தின் தற்போதைய நீர் மட்டம் 36 அடியை எட்டியுள்ளது. இந்த நிலையில் ஒரு வான் கதவை ஆறு இஞ்சி அளவில் ஜனாதிபதி திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, முன்னாள் அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, முன்னாள் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என். சுதாகரன், மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிறேம்குமார், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் பரனிதரன், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், கரைச்சிப்பிரதேச சபையின் தவிசாளர் த.வேழமாலிகிதன், இரணைமடு விவசாய சம்மேளனத்தின் தலைவர் மற்றும் இரணைமடு கமக்கார அமைப்புக்களின் பிரதி நிதிகள், அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: கண்டாவளை, பரந்தன் செய்தியாளர்கள்)

# பக்காவா போட்டார் அஷ்வின்

## பயந்து நடுங்கியது அவுஸ்திரேலியா


ஆஸி., அணியின் முன்னணி விக்கெட்டுக்களை தகர்த்தெறிந்த மகிழ்ச்சியில் இந்தியாவின் அஷ்வின்


தனியொருவனாக போராடும் ஆஸியின் ட்ராவிஸ் ஹெட்

அடிலெய்ட் டெஸ்டில் இந்திய அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறுகிறது அவுஸ்திரேலியா. 'சுழலில்' அசத்திய அஷ்வின் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் அடிலெய்டில் நடக்கிறது.

நேற்று முன்தினம் முதல் நாள் முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களை எடுத்திருந்தது. மொஹமட் ஷமி (6) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ஷமி 'அவுட்'**

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. ஹேசல்வுட் முதல் ஓவரின் முதல் பந்தை பவுன்சராக வீசினார். இதில் ஷமி (6) சிக்க முதல் நாள் ஸ்கோருடன் (250 ஓட்.,) இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. பும்ரா (0) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் ஹேசல்வுட் 3, ஸ்டார்க், கம்மின்ஸ், லயன் தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**இஷாந்த் நம்பிக்கை**

தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. இஷாந்த் வீசிய முதல் பந்தின் 3வது பந்தில் 'ஸ்டம்சுகள்' பறக்க, பின்ச் 'டக்' அவுட்டானார். பும்ரா பந்தில் பவுண்டரி அடித்த ஹறிஸ், 26 ஓட்டங்கள் எடுத்த போது அஷ்வின் சுழலில் சிக்கினார். பின் கவாஜா, ஷோன் மார்ஷ் இணைந்தனர். உணவு இடைவேளைக்குப் பின் அஷ்வின் வீசிய முதல் ஓவரில் ஷோன் மார்ஷ் (2) போல்டானார். அடுத்து வந்த ஹேண்ட்ஸ்கோம்ப், ஷமி வீசிய 37ஆவது ஓவரில் மூன்று பவுண்டரிகள் விளாசினார்.

**கைகொடுத்த 'டி.ஆர்.எஸ்.,'**

அஷ்வினின் 14.3ஆவது ஓவரை எதிர் கொண்டார் கவாஜா. இந்த பந்தை பிடித்த பன்ட், 'அவுட்' கேட்டு அப்பீல் செய்ய நடுவர் தர்மசேன (இலங்கை) தர மறுத்தார். ஹோலி 'டி.ஆர்.எஸ்.,' கேட்டார். ரீப்ளேயில் பந்து கவாஜா (28) பெருவிரலில் பட்டுச்சென்றது தெரிய வர இந்திய ரசிகர்கள் உற்சாகம் ஆகினர்.

**ஹெட் அரைசதம்**

அடுத்து வந்த ஹேண்ட்ஸ்கோம்ப் (34) பும்ரா 'வேகத்தில்' வீழ்ந்தார். கப்டன் ரிம் பெய்னை (5) இஷாந்த் வெளியேற்றினார். ஷமி ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்த ட்ராவிஸ் ஹெட், சொந்தமண்ணில் முதன் முறையாக அரைச்சதம் அடித்தார். மீண்டும் வந்த பும்ரா இம்முறை கம்மின்சை (10) அவுட்டாக்கினார். இரண்டாவது நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 7 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹெட் (61), ஸ்டார்க் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் அஷ்வின் 3, இஷாந்த், பும்ரா தலா 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

**அஷ்வின் "ரொப்"**

டெஸ்ட் அரங்கில் அதிகமான இடது கை துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்த சுழற்பந்து வீச்சாளர்களில் இந்தியாவின் அஷ்வின் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

அடிலெய்டில் நடந்து வரும் அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான டெஸ்டின் நேற்றைய 2ஆம் நாளாட்டத்தில் ஆஸியின் ரொப் ஓர்டரின்' 3 இடது கை துடுப்பாட்ட வீரர்களை அஷ்வின் அவுட்டாக்கினார்.

டெஸ்ட் அரங்கில் குறைந்தது 200 விக்கெட்டுகளுக்கு மேல் சாய்த்த சுழற்பந்து வீச்சாளர்களில், அதிகமான இடது கை வீரரை வீழ்த்தியதில் அஷ்வின் தொடர்ந்து 'நம்பர் 1' ஆக திகழ்கிறார். இவர் மொத்தம் வீழ்த்திய 339 விக்கெட்டுகளில் 179 பேர் இடது கை (160 வலது கை) துடுப்பாட்ட வீரர்கள். இதன் சராசரி 52.80 ஆக உள்ளது. அடுத்த இடத்தில் இங்கிலாந்தின் சுவான் (255ல் 122) உள்ளார்.

ஷமி காயமடைந்தபோது...



**ஷமி காயமா?**

அடிலெய்டில் டெஸ்டின் நேற்றைய 2ஆம் நாளாட்டத்தில் தனது 4து ஓவரை வீசினார் இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஷமி.

அப்போது வலது தோள் பகுதியில் வலி ஏற்பட்டது. உடனடியாக மைதானத்துக்குள் வந்த பிசியோதெரபிஸ்ட் பர்கத், அவரை சோதனை செய்தார். இருப்பினும் வலி தொடர, அந்த ஓவரை முடித்து விட்டு பெவிலியன் திரும்பினார். பின் உணவு இடைவேளை வரை களமிறங்கவில்லை.

ஏற்கெனவே இஷாந்த், பும்ரா, ஷமி, அஷ்வின் என நான்கு பந்துவீச்சாளர்களு டன் மட்டும்தான் இந்திய அணி களமிறங்கியது. இதில் ஷமி காயம் என்றால் அவ்வளவு தான். இந்திய அணிக்கு பெரும் சிக்கலாகிப் போகும்.

இதுகுறித்து இந்திய அணி செய்தித் தொடர்பாளர் கூறுகையில்," மொஹமட் ஷமிக்கு ஒன்றுமில்லை. விரைவில் வந்து விடுவார்.' என்றார். நல்லவேளையாக மீண்டும் களமிறங்கிய வழக்கம் போல பந்துவீச்சை தொடர்ந்தார்.

# தொடரை வென்றது நியுசி.,

## 49 ஆண்டுகளுக்கு பின்...


வெற்றிக் கிண்ணத்துடன் நியூசிலாந்து அணியினர்

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் சுழற்பந்துவீச்சாளர்கள் கைகொடுக்க நியூசிலாந்து அணி 123 ஓட்டங்களால் வென்று, தொடரையும் கைப்பற்றியது.

ஐக்கிய அரபு எமிரேட்சில் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றன.

முதலிரண்டு போட்டிகள் முடிவில் தொடர் 1-1என சமனிலையில் இருந்தது. மூன்றாவது டெஸ்ட் அபு தாபியில் நடந்தது

முதல் இன்னிங்சில் நியூசிலாந்து 274, பாகிஸ்தான் 348 ஓட்டங்கள் எடுத்தன. நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில், நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று நான்காம் மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. வில்லியம்சன் 139 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். நிக்கோல்ஸ் (126*) சதம் கடந்தார். நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட்டுக்களை இழந்து 353 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, 'டிக்ளேர்' செய்தது.

280 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்தது. சோமர்வில்லி 'சுழலில்' ஹறிஸ் சொகைல் (9), அசாத் சபிக் (0) ஆட்டமிழந்தனர். பாபர் அசாம் (51) ஆறுதல் கொடுத்தார். அஜாஸ்படேல் சுழற்பந்துவீச்சில் ஹசன் அலி (4) சிக்க, பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்சில் 156 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 123 ஓட்டங்களால் வீழ்ந்தது.

இதன்மூலம், நியூசிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 2-1 என கைப்பற்றியது.

**49 ஆண்டுகளுக்கு பின்...**

நியூசிலாந்து அணி அந்நிய மண்ணில் பாகிஸ்தானுக்கு எதிராக 49 ஆண்டுக்குப்பின் டெஸ்ட் தொடரை வென்று சாதித்தது. இதற்கு முன், 1969ல் பாகிஸ்தானில் நடந்த 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என வசப்படுத்தி இருந்தது.


கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரிய கலாசாலைகளின் கல்விசாராப் பணியாளர்

நாகலிங்கம் ஆறுமுகசாமிநையினார்

(ராசன்)

தோற்றம்: 07.07.1965 மறைவு: 07.12.2018

அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எமது கலாசாலையில் கோயில் கொண்டருளும் யோகலிங்கேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

கலாசாலைச் சமூகம்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

(C-4644)

# பாராளுமன்றத்தின் அதிகாரம் குறைப்பு ஜனாதிபதியின் அதிகாரம் அதிகரிப்பு!

## 19 ஆவது திருத்தம் குறித்து பிரியதர்ஷன

(கொழும்பு)

19 ஆவது அரசியல்அமைப்பு சீர்திருத்தத்தின் ஊடாக பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அதிகரிக்க முற்பட்டு அதன் அதிகாரம் குறைவடைந்திருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கச் சென்று அவரின் அதிகாரம் அதிகரிக் கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். அதன் விளைவுகளை தற்போது காண முடிகிறது.

அரசியல் அமைப்பில் பகுதியளவிலான சீர்திருத்தம் செய்வதை நிறுத்தி விட்டு, அதனை முழுமையான சீர்திருத்தத்திற்கு உட்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன.

இந்த மாதம் 30 ஆம் திகதி வரை பிரச்சினைகள் இன்றி அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்க முடியும் என்றும் உள்நாட்டு வெளிநாட்டு கடன்களைச் செலுத்துவதற்கும் மக்களுக்கு ஏனைய நிவாரணங்களை வழங்குவதற்கும் முடியும் என்றும் கூறினார்.



அரசியல் குழப்ப நிலை காரணமாக அரச சேவையாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பது முறையற்றதாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-4)


# மதுரம் கல்வி நிறுவனம் மற்றும் மதுரம் முன்பள்ளியின் பரிசுத் தினமும் மழலைகள் மகிழ்வரங்கும்- 2018

O/L-2017

எமது நிறுவனத்தின் சாதனை மாணவர்களை இந்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



9A கி.சுகிகரன் யா/ கொ.இ.க.
9A ந.தர்சினி யா/ வே.ம.க.
9A வ.டிலோஜனா யா/ வே.ம.க.
8AB ப.தக்ஷா யா/ இ.ம.க.
8AB ஸ்ரீ.மிறோஜிகா யா/ இ.ம.க
8AB ஆ.அருண் யா/ கொ.இ.க.
8AB இ.ஹரிகரன் யா/க.ம.மா.வி.
7AC க.கஜானன் யா/க.ம.மா.வி.
7A2B ம.தர்மிகா யா/வே.ம.க.
6AB2C சி.வபிதா யா/ இ.ம.க.
6A2BC ஜெ.காயத்திரி யா/இ.ம.க.
5A2B2C மு.சிந்துஜா யா/இ.ம.க.
5AB3C தே.கமிர்தன் யா/அ.இ.க
5AB3C அ.மேனுசா யா/இ.ம.க.

**மழலைகள் மகிழ்வரங்கும் பரிசுத் தினமும்- 2018**

இடம்:- கணேஸ் கலையரங்கம் (மதுரம் கிட்ஸ்)
காலம்:- 08.12.2018 சனிக்கிழமை
பிற்பகல் 2.30 மணி

தலைமை
**திரு. S.K. கிருபாகரன்**
(தலைவர், மதுரம் கிட்ஸ் முன்பள்ளி)

பிரதம விருந்தினர்
கொடைவேல் அண்ணல்
**திரு. K. செவ்வேள்**
(வடக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர்)

சிறப்பு விருந்தினர்
**திருமதி பிரியதர்சினி சுஜீவன்**
(உதவி பிரதேச செயலர், வவுனியா பழைய மாணவி, மதுரம் கல்வி நிறுவனம்)
**திரு.யோக.தயாளன்**
(அதிபர், யா/ திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம், முன்னாள் ஆசிரியர்

ஆசியுரை
**பிரம்ம ஸ்ரீ பா.கஜீலக்குருக்கள்**
(பெற்றோர்) பிரதமகுரு, சிறுப்பிட்டி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

நன்றியுரை
**திரு. S. தேவரஞ்சன்**
(செயலாளர், மதுரம் கிட்ஸ்)
யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி,
இருபாலை
கோப்பாய்.
077 912 2918

நிர்வாகத்தினர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பெற்றோர்கள்.

**தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை-2018**



பி.மயூரன்- 188 யா/ இ.ஆ.பா.
சி.சோபிகன்- 187 யா/ க.இ.த.க.பா.
ர.தேஜஸ்வினி- 185 யா/ கோ.நாவலர்
வ.ஜிணோசன்- 183 யா/ கொ.இ.ஆ.பா.
க.விஸ்மியா- 179 யா/ க.இ.த.க.பா
லோ.டேனிலா- 176 யா/ கோ.நாவலர்
கி.லித்திகா- 175 யா/ பு.ஜோ.பொ.வி.
தி.கிஷோக்ராஜ்- 170 யா/ கோ.நாவலர்
ஸ்ரீ.தவணியா- 170 யா/ க.இ.த.க.பா.

**150 இற்கு மேல் பெற்ற மாணவர்கள்**
பா.ஹரிசரன்- 160- யா/ முத்துத்தம்பி
உ. தேனுஸ்ரினி- 160- யா/ கோ.ம.வி.
சு.ஸ்ருதிகா- 160 -யா/ கோ. நாவலர்
தே. அகலிசை- 160- யா/ கோ. நாவலர்
ச.கஸ்மிகா- 159- யா/ கோ. நாவலர்
பி.கிரன்ராஜ்-153-யா/ கோ. நாவலர்
ஆ.நிலக்சனா- 152- யா/ கோ. நாவலர்
ந.அகல்யா- 150- யா/ கோ.ம.வித்தியாலயம்.




(சு-4637)

நிர்வாகத்தினர்- 077 912 2918


# இராசி பலன்

**மீனம்:** மற்றவர்களின் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள்.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், விரயங்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**கும்பம்:** தொழிலில் புதிய கூட்டாளிகளை இணைக்கும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை செய்து முடிப்பீர்கள், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மகரம்:** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறும்.

**இராசி பலன்** — கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ். | இராசி பலன் | | ராகு |
| கேது | சந்திராஷ்டமம் ரோகினி காலை 6.42 மணிக்கு தனுசு- சந் | | |
| சனி சந் | சூரி. குரு | புத. சுக். | |

08.12.2018
கார்த்திகை 22, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு
பிரதமை பிற்பகல் 2.26 மணிவரை
கேட்டை காலை 6.58 மணிவரை
சுபநேரம் 3.17- 4.47 மணிவரை
இராகுகாலம் 9.17- 10.47 மணிவரை

வளவன்

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சவால்களை சாமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, சோம்பலை விலக்குவது நல்லது.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** இளைய சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று கைகூடும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வாகன பழுதுச் செலவுகள் குறையலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும் நாள்.

## "கலைஞானச்சுடர்" விருது வழங்கல்



(யாழ்ப்பாணம்)

கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளைக்கு கடந்த 20 ஆம் திகதி நல்லூர் பிரதேசசபையில் கலாசாரப் பேரவையால் நடத்தப்பட்ட நல்லூர் பிரதேச பண்பாட்டு பெருவிழாவில் நாட்டுக்கூத்துக் கலைத் துறைக்கு அவர் இதுவரை ஆற்றிய பணியை நயத்து பாராட்டி "கலைஞானச்சுடர்" என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்த விருதை வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் வழங்கிக் கௌரவித்தார். (இ)

## "மாட்டிறைச்சிக்கடைகளை மூடி பசுவதையை தடுக்க வேண்டும்"

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளின் மாட்டிறைச்சிக் கடைகளை மூடி பசுவதையைத் தடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பல்வேறுபட்ட சமய,சமூக அமைப்புகள் சபை ஆரம்பித்த காலத்தில் இருந்தே அழுத்தம் கொடுத்து வருகின்றன.

அதற்கு ஒரு சில நகர மற்றும் பிரதேச்சபை உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

சாவகச்சேரி நகரசபையின் மாட்டிறைச்சிக்கடை மற்றும் கொல்களத்தினை மூட வலியுறுத்தி சிவசேனா அமைப்பினர் உள்ளிட்ட மத குருமார்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் நடைபவனி, உணவு வெறுப்புப் போராட்டம் ஆகிய செயற்பாடுகளை சாவகச்சேரி நகரில் முன்னெடுத்ததுடன், பிரதேச செயலர் மற்றும் நகரசபைத் தவிசாளர் ஆகியோருக்கும் மாட்டிறைச்சிக்கடையை மூடி தமிழர் பண்பாட்டைப் பேணுமாறு கோரிக்கை கடிதம் வழங்கப்பட்டிருந்தது.

இவ் விடயம் ஓரிரு மாதங்கள் விடுபட்ட நிலையில் தற்போது 2019 ஆம் ஆண்டிற்கான மாட்டிறைச்சிக்கடை உரிமம் கோரப்படவுள்ள நிலையில் சமூக அமைப்பினர் மற்றும் மதகுருமார்கள் சாவகச்சேரி நகர, பிரதேச சபைகளில் மாட்டிறைச்சிக் கடைக்கு அனுமதி வழங்காது பசுவதை, சட்டவிரோத மாடு அழிப்பு ஆகியன இடம்பெறாமல் தடுக்க தமக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அது போக சபை உறுப்பினர்களே மாட்டிறைச்சிக் கடைக்கு அனுமதி வழங்கினால் உண்ணாவிரதம் இருப்போம் எனக் கூறி எச்சரித்துள்ளனர். (இ-30)

## அபிவிருத்திக்காக நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட இரு பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கே யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த:சித்தார்த்தனின் 2018 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து சுமார் நான்கரை இலட்சம் ரூபா வழங்கி வழங்கப்பட்டுள்ளது.

வலி.தெற்கு (உடுவில்) பிரதேச செயலகத்தில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற இந் நிகழ்வின் போது வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபனால் மேற்படி பாடசாலைகளுக்கான காசோலைகள் அதிபர்களிடம் வழங்கப்பட்டன.

வலி.தெற்கு (உடுவில்) பிரதேச செயலாளர் ஜெயக்காந்த் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் உள்ளக பாதையமைப்புக்காக இரண்டரை இலட்சமும், இணுவில் இந்துக்கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இரண்டு இலட்சம் பெறுமதியான காசோலைகளும் வழங்கப்பட்டன. (இ-7)

## நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஒரே இடத்தில் பிள்ளையார்,புத்தர்,மாதா





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநரின் ஐரோப்பிய விஜயத்தின்போது சுவிஸ் புங்குடுதீவு ஒன்றியம் விடுத்த வேண்டுகோளின் பேரில் புங்குடுதீவில் இருண்ட பகுதிகளுக்கான வீதி விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக மடத்துவெளி முதல் குறிஞ்சிக்காடு வரையான பகுதிக்கு வீதி விளக்கு பொருத்தும் பணிகளை ஆளுநர் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளார்.

ஆளுநரின் ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின்போது சுவிஸ் ஒன்றியத்தின் தலைவர் சொ.ரஞ்சன் தீவகத்தின் பல்வேறு தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளுக்கான குளங்கள் புனரமைக்கப்படல் வேண்டும். மக்களின் பாதுகாப்பு கருதி வீதி விளக்குகள் பொருத்தப்படல் வேண்டும். தீவகத்தில் கல்வித் தேவைக்காக ஆசிரியர்களின் ஆளணியினை அதிகரிக்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை விடுத்திருந்தார்.

அது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட கூட்டத்தினை கடந்த 5 ஆம் திகதி கூட்டிய ஆளுநர் வீதி விளக்கு பொருத்தும் பணிகளை ஆரம்பித்ததோடு புங்குடுதீவில் வெளிச்சவீட்டிற்கு செல்லும் பாதையை செப்பனிடும் பணியினையும் ஆரம்பித்து வைத்தார்.

நயினாதீவுக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் புங்குடுதீவு வெளிச்சவீட்டினையும் பார்வையிடும் வகையில் வீதியை செப்பனிட்டு அப்பகுதியை அழகுபடுத்தும் பணியினையும் ஆரம்பித்து வைத்தார்.

புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தை அண்மித்த கடற்கரை பகுதியினை அழகுபடுத்துவதற்கான மரங்களை நாட்டிவைத்த ஆளுநர் தீவுப் பகுதிக்கான நுழைவாயில் அமைந்துள்ள பகுதியில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் பிள்ளையார், புத்தர், மாதா சொரூபங்களையும் ஒரே இடத்தில் பிரதிஷ்டை செய்யும் பணியை பார்வையிட்டார். (இ-7)




## அறநெறிப் பாடசாலை கலை விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழி சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரபர் ஆலய அறநெறிப்பாடசாலையின் கலை விழா நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் எஸ்.பி.காசிநாதன் (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பண்ணை மார்பு நோய்ச் சிகிச்சை நிலைய வைத்தியர் சி.யமுனானந்தாவும் சிறப்பு விருந்தினராக யாழ். சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தாவும் கலந்து கொள்வர். (இ-5)

## பிரதேச சபையால் ஒருபோதும் வறுமையை ஒழிக்க முடியாது

### நிதி கோரிய உறுப்பினருக்கு தவிசாளர் பதில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டத்தில் உறுப்பினர்களுக்கு ஒதுக்கிய நிதியை வறுமை ஒழிப்பிற்கு பயன்படுத்த அனுமதி வழங்குமாறு பிரதேசசபை உறுப்பினர் கு.குகானந்தன் தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டிற்கான சாவகச்சேரி பிரதேச சபை பாதீட்டில் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் நான்கு இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த நிதி ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பாரிய வேலைத்திட்டங்கள் எதனையும் முன்னெடுக்க முடியாது. ஆகவே குறித்த நிதியை பிரயோசனமான வழியில் செலவு செய்வதாயின் வறுமை ஒழிப்பிற்கு பயன்படுத்த சபை அனுமதி வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். இதற்கு தவிசாளர் பதிலளிக்கையில்,

பிரதேச சபையின் மூலம் வறுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர ஒருபோதும் பிரதேச சபையால் வறுமையை ஒழிக்க முடியாது.

வரவு-செலவுத் திட்டத்தில் வறுமை ஒழிப்பிற்கு நிதி ஒதுக்கும் திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பிற்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யும் நபர்கள் அதற்கு தகுதியானவர்கள் அல்ல என்று கிராம உத்தியோகத்தர்கள் மறுத்து விடுகிறார்கள்.

ஆகவே தனிமனிதர் சம்பந்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு இடமில்லை. வரவு-செலவுத்திட்டத்திற்கென நிபந்தனைகள் உள்ளன. அதனை நாம் மீற முடியாது எனத் தெரிவித்திருந்தார். (இ-30)

## கல், மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட மணல், செம்மண், கண்டாவளை மணல், கிரவல் மற்றும் கற்கள் எதிர்வரும் 19.12. 2018 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. மேலும் ஏலத்தில் வாங்கப்பபடும் மணல், செம்மண், கண்டாவளை மணல், கிரவல் மற்றும் கற்களை உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும், அத்துடன் ஏலத்தினை கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டைகளைக் கொண்டு வருதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சரஸ்வதி முன்பள்ளியின் 33 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 33 ஆவது மற்றும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 7 ஆவது கலை விழா இன்று 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கொக்குவில் பொற்பதி வீதி, பொற்பதி அறிவாலயத்தில் சரஸ்வதி முன்பள்ளித் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் சிவன் பவுண்டேசன் ஸ்தாபகர் க.வேலாயுதம், நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ரி.தியாகமூர்த்தி, கௌரவ விருந்தினர்களாக கனடா தொழிலதிபர் மு.பரந்தில்லைராஜா,யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஓய்வுநிலை அதிபர் ரி.மாலதி, லண்டன் வர்த்தகர் ஏ.வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## ஐயனார் கோவிலில் ஐயப்பன் பஜனை

(யர்ழ்ப்பாணம்)

மூளாய் பிள்ளையார் கோவிலிலிருந்து இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாதயாத்திரையாகச் செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு வழிநெடுகிலும் பூரண கும்பம் வைத்து பாதபூஜை செய்து - ஐயனார் கோவிலில் விசேட பூஜையும் பஜனையும் நடைபெற்று சக்தி பூஜையும் இடம்பெறும்.

ஐயப்ப பக்தர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு மூளாய் பூரணை புஷ்களை சமேத ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் மற்றும் ஸ்ரீ காயத்திரி அம்பாள் ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-4)

## "பாரம்பரியக் கலை-பயிலரங்கு"

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகார சபையின் கலை கலாசார மேம்பாட்டு வேலைத்திடத்தின் "சமூக, பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்போம்" எனும் பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு "பாரம்பரியக் கலை - பயிலரங்கு" நாளை மறுதினம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இச் செயலமர்வின் வளவாளர்களாக யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகார சபையின் யோகாப் போதானாசிரியர் கலாபூஷணம் ந.சிவனேஸ்வரராஜா மற்றும் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-107)



பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை பிரதேசசபை மண்டபத்தில் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும். போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மகாலிங்கம்)

# பருத்தித்துறை நகரசபையின் பட்ஜெட் நேற்று நிறைவேற்றம்

## த.தே.ம.மு. உறுப்பினர்கள் வெளிநடப்பு

(பருத்தித்துறை)

2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வரைபு சபைக்கு தவிசாளரால் 23.11.2018ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களின் கருத்துக்கள் ஒவ்வொருவராக கேட்கப்பட்டு அவர்களின் முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டது. பின்னர் பொது மக்களின் பார்வைக்காக வரவு-செலவுத்திட்டம் 03.12.2018 ஆம் திகதி வரை பார்வைக்கு விடப்பட்டது.

நேற்று 07.12.2018ஆம் திகதி சபையில் தவிசாளர் யோ.இருதயராஜாவால்வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அவருடைய வரவு-செலவுத்திட்ட உரையினைத் தொடர்ந்து செயலாளர், கணக்காளரின் விளக்கவுரையின் பின்னர் சபை உறுப்பினர்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போது உறுப்பினர் க.பாலசுப்பிரமணியம் (த.தே.ம.மு), உறுப்பினர் சி.தயாபரன் (த.தே.கூ), உறுப்பினர் துலேஜனா (சுயேட்சைக்குழு), உறுப்பினர் க.பாமதி(த.தே.கூ), உபதவிசாளர் நெ.மதினி (த.தே.கூ), உறுப்பினர்மு.பிறேம்குமார் (ஈ.பி.டி.பி) ஆகியோர் கருத்துரைகளை வழங்கிய பின்னர் எதுவித திருத்தங்களுமின்றி உறுப்பினர் க.பாலசுப்பிரமணியத்தின் எதிர்ப்புடன் வரவு-செலவுத்திட்டம் முன்மொழிந்து வழிமொழிந்து நிறைவேற்றப்பட்டது.

வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தவிசாளர், சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு நன்றி தெரிவித்தார். பின்னர் உறுப்பினர் ப.சுரேஸ் (த.தே.ம.மு) திடீரென எழுந்து வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவிப்பதாக தவிசாளரைப் பார்த்து உரத்த குரலில் தெரிவித்தார். வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அது பற்றி கருத்துக் கூற முடியாது என தவிசாளர் தெரிவித்தார்.

ஆனால் உறுப்பினர் ப.சுரேஸ் தொடர்ந்து சத்தமிட்டார். தவிசாளர் மூன்று தடவைகள் அமைதியாக அமருமாறு அறிவித்தல் விடுத்ததன் பின்னர் உறுப்பினர்ப.சுரேஸ்சபையிலிருந்து வெளியேறுமாறு அறிவித்தார்.

உறுப்பினர் சபையிலிருந்து வெளியேற அவரைத் தொடர்ந்து தாமும் சபையிலிருந்து வெளியேறுவதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் 5 உறுப்பினர்களும் வெளி நடப்புச்செய்வதாக அறிவித்து வெளியேறினர்.

2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் 103.3 மில்லியன் ரூபாய் இதில் 28 மில்லியன் மூலதன வேலைத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மீண்டுவரும் செலவினங்களின் கீழ் 75.3 மில்லியனும் மூலதனச் செலவில் 10.6 மில்லியன் பொலித்தீன் எரியூட்டும் கருவி, திண்மக்கழிவுக்கான காணிக் கொள்வனவு, நவீன சந்தைக் கட்டணக் கழிப்பறை, நூலகப் புத்தகக் கொள்வனவு, தெரு மின் விளக்கு, சிறுவர் பூங்கா, வடிகாலமைப்பு என்பவற்றிற்கும் உறுப்பினர்களால் அடையாளம் காணப்பட்டு அவர்களால் வட்டார ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 14 வீதிகளுக்காக 17.3 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 2019 ஆம் ஆண்டுக்கான அடையாள ஏற்பாட்டு ஒதுக்கமாக திண்மக்கழிவு நிலையம், புதிய மீன் சந்தை, புதிய மரக் கறி சந்தை, பொது நூலக மேல் மாடி பூரணப்படுத்தல், கோரியடி பொதுமக்கள் பூங்கா, பாரம்பரிய உணவகமும் உள்ளடக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-4)

## ஆயிரம் ரூபா கோரி நான்காவது நாளாகவும் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்

(கொழும்பு)

அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்துமாறு கோரி தோட்டத்தொழிலாளர்கள் நேற்று நான்காவது நாளாக தொடர் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்திலீடுபட்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் தமது சம்பள உயர்வு கோரி பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்த நிலையில், பிரவுன்ஸ் விக் தோட்ட தொழிற்சாலை முன்பாக முற்பகல் 10.30 மணியளவில் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதன்போது தொழிலாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

நாம் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி நமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். பல கோடி ரூபாவை தோட்ட உரிமையாளர்கள் வருடாந்த இலாபம் ஈட்டுகின்றனர். அப்போது ஏன் 1000 ரூபாவை எமக்கு அடிப்படைச் சம்பளமாக வழங்க முடியாது. அவ்வாறு கொடுக்காவிடின் பொறுப்பை அரசிடம் ஒப்படைத்து விடுங்கள் எனத் தெரிவித்தார். (இ-7)

# பரீட்சைக்கு குறுஞ்செய்தியில் விடை ஆசிரியையும் மாணவனும் கைது!

(பலாங்கொடை)

நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கைத்தொலைபேசி குறுஞ்செய்தி மூலம் விடைகளை வழங்கிய பெண் ஆசிரியை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பரீட்சையில் கைத்தொலைபேசியை பயன்படுத்திய குறித்த மாணவனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொட பிரதேசத்தில் ஆங்கிலப்பாட பரீட்சையின் போது கைத்தொலைபேசியை பயன்படுத்தி விடையெழுதிய மாணவனும் மாணவனுக்கு உதவிய ஆசிரியையுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)


## யாழ்.மாவட்ட சி.க.கூ.ச.சமாசம் (வ-து)

புதிய பணிமனை திறப்பு விழாவும் கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் சிலை திறப்பு விழாவும்.

**அழைப்பிதழ்**

**இடம்:**

புதிய கட்டட வளாகம், உப்புக்கடை ஒழுங்கை, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு யாழ்ப்பாணம்

**காலம்:**

*09.12.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி*

**தலைமை**

**திரு.வீ.கே.அருந்தவநாதன் அவர்கள்**
(தலைவர், யா.மா.சி.க.கூ.ச.சமாசம்)

**முதன்மை விருந்தினர்**

**திரு.நா.வேதநாயகன் அவர்கள்**
(மாவட்ட செயலர், யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

**திரு.பொ.வாகீசன் அவர்கள்**
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், (வடமாகாணம்)

**திரு.ந.திருலிங்கநாதன் அவர்கள்**
செயலாளர், கூ.வே.ஆணைக்குழு (வடமாகாணம்)

**திரு.டாக்டர் பி.ஏ.கிரிவந்தெனிய அவர்கள்**
தலைவர், இலங்கை சி.க.கூ.சங்கங்களின் சம்மேளனம்

**திரு.ஏ.ஜெயசித் அவர்கள்**
பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி

"விழா சிறப்புற அனைத்து கூட்டுறவாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்"

(C-4633)

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.



# BRITISH COLLEGE OF ENGLISH

IELTS Academic + General

IELTS Life Skills

**Cambridge English Courses**

- Cambridge Preliminary Test (PET) (B1)
- Cambridge First Certificate in English (FCE) (B2)
- Cambridge Advanced English (CAE) (C1)

2004 ஆம் ஆண்டு எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சுமார் 5000 மாணவர்கள் IELTS இல் சித்தியடைந்து UK, Australia, Canada, USA போன்ற நாடுகளில் நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.

A1, பரீட்சையில் சுமார் 750 இற்கு மேல் City & Guilds மற்றும் IELTS - Life Skills பரீட்சையில் நமது நாட்டு இல்லத்தரசிகள் சித்தியடைந்து UK ல் வசித்து வருகின்றனர்.

University of Cambridge Certificate வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடியவை. Cambridge English Qualification Registration Centre for the British Council.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்

JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT

NO.464, Hospital Road, Jaffna. 075 261 3659 077 880 3887

# பாராளுமன்ற பொதுத் தேர்தலை நடத்தக்கோரி மன்னாரில் ஆர்ப்பாட்டம்



(மன்னார்)

அபிவிருத்தி அற்ற ஆட்சியை மாற்றி பாராளுமன்ற பொதுத் தேர்தலை நடத்தக் கோரி மன்னார் மாவட்ட "ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன" கட்சியினரால் மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலை பிரதான வீதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் குறித்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன" கட்சியின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீண்டும் பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் எனவும், சுயாதீனமான பாராளுமன்ற பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் பஸார் பகுதிக்குச் சென்று பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## பகிரங்க ஏலவிற்பனை

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என பதிவாளர் அறிவித்துள்ளார். (2)




### ஜனவரி-நவம்பர் மாதம் வரை

# மன்னாரில் இடம்பெற்ற சுற்றிவளைப்புக்களில் வர்த்தகர்களுக்கு எதிராக 302 வழக்குகள் பதிவு

## தண்டப் பணம் அறவீடு–மாவட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையிலான 11 மாத காலப் பகுதிகளில் இடம்பெற்ற திடீர் சுற்றிவளைப்பின் போது மட்டும் வர்த்தகர்களுக்கெதிராக 302 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 10 இலட்சத்து 14 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எம்.பி.எவ்.கமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை 293 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது மன்னார் மாவட்ட வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் விற்பனை, விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, உற்பத்திப் பொருட்கள் தொடர்பான விபரங்கள் உரிய முறையில் காட்சிப்படுத்தாமை, குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக பொருட்கள் விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்கெதிராக மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வகையில் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டதற்கமைய கடந்த ஜனவரி மாதம் 38 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 91 ஆயிரத்து 500 ரூபாவும் பெப்ரவரி மாதம் 17 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு இலட்சத்து ஆயிரம் ரூபாவும் மார்ச் மாதம் 28 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 73 ஆயிரம் ரூபாவும் ஏப்ரல் மாதம் 17 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 47 ஆயிரம் ரூபாவும் மே மாதம் 32 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 500 ரூபாவும் ஜூன் மாதம் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 15 ஆயிரம் ரூபாவும் ஜூலை மாதம் 29 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 91 ஆயிரம் ரூபாவும் ஓகஸ்ட் மாதம் 46 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 67 ஆயிரத்து 500 ரூபாவும் செப்டெம்பர் மாதம் 13 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 55 ஆயிரத்து 500 ரூபாவும் ஒக்டோபர் மாதம் 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் நவம்பர் மாதம் 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 92 ஆயிரம் ரூபாவும் நீதிமன்றத்தினால் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# கிராம அலுவலர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அலுவலகர் ஒருவர் முன்னாள் போராளி மற்றும் பொதுமகன் தொடர்பில் செய்யப்பட்ட அசாதாரண முறை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் கடந்த மாதம் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இம் முறைப்பாடு தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டிருந்ததுடன் இரண்டிற்கு மேற்பட்ட தடவைகள் நேரடி விசாரணைகளை நடத்தியதுடன் அதிகார துஷ்பிரயோகம், தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு மற்றும் பழிவாங்கல், அரச நிவாரணத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதுடன் இம் முறைப்பாட்டாளர்கள் அவற்றை நிரூபிப்பதற்கு சாதகமான சான்று, ஆவணங்களையும் சமர்ப்பித்திருந்தனர்.

குறித்த அதிகாரியை தவறென இனங்கண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாக பிரதேச செய்லாளருக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரியபோதும் அவர் அதனைச் செய்யத்தவறியதால் இவ்விடயத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு முல்லைத்தீவு மாவட்ட செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதுடன் பணியிலிருந்து கிராம அலுவலகர் துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-281)

## இலவச தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(கிளிநொச்சி)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது கிளிநொச்சி மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில், 2019 ஆம் ஆண்டில் இக்கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், 155ஆம் கட்டை, கிளிநொச்சியில்தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், சிறுவர் பராமரிப்பு, குடிசார் படவரை கலைஞர், கணனி பட வடிவமைப்பாளர், நீர் குழாய் பொருத்துநர், கணிய அளவையாளர், குளிர்சாதன உபகரண திருத்துநர், முதியோர் பராமரிப்பாளர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கை நெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், 155 ஆம் கட்டை, ஏ-9 வீதி, கிளிநொச்சியில் அல்லது அந்தந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 15.12. 2018 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என உதவிப்பணிப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார். (2)

# வவு.பழைய பேருந்து நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு திறப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையம் கடந்த ஒரு வருடங்களின் பின்னர் நேற்று மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9 மணியளவில் பழைய பேருந்து நிலையம் வவுனியா நகர பிதா இ. கௌதமனினால் மக்கள் பயன்பாட்டிற்காக உத்தியோக பூர்வமாக திறந்து கையளிக்கும் நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.ஐ. ஹனீபா, மேலதிக அரசாங்க அதிபர் ரி. திரேஸ் குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். எஸ்.எம்.தென்னக்கோன், வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்லுவரார்ச்சி, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வவுனியா அமைப்பாளர் திலீபன், நகர சபை உப நகர பிதா, நகர சபை செயலாளர், நகரசபை உறுப்பினர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தலைவர், வர்த்தக உறுப்பினர்கள், சங்கப் பிரமுகர்கள், ஊழியர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (2-281)



பளைப் பிரதேச வைத்தியசாலையில் கடந்த 4 ஆம் திகதி மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் சுமார் நூற்றிற்கு மேற்பட்ட பணியாளர்களினால் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்ட போது...

# சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படுத்தாதீர்கள் வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

(குருமன்காடு)

வவுனியாவில் சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படுத்தாதீர்கள் என தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றிருந்தது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக வவுனியா மாவட்டத்தை சேர்ந்த மூவினங்களையும் உள்ளடக்கிய சிவில் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் தமிழ், சிங்கள,முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது "மீண்டும் நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்காதே, கடந்த யுத்த வடுவே எம்மிடம் ஆறவில்லை, மீண்டும் யுத்தம் என்ற சொல் கூட எமது நாட்டிற்கு வேண்டாம், தேசிய நல்லிணக்கத்தை காப்பாற்றுவோம்"என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தம்முடன் தாங்கியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



இதன்போது முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரத்தின, வவுனியா நகர பள்ளிவாசல் தலைவர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## பாவற்குளம் உடைப்பெடுத்தால்
# அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான ஒத்திகை





(குருமன்காடு)

வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை பாவற்குளம் கிராமத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து அனர்த்தம் ஏற்பட்டால் எவ்வாறு மக்களை பாதுகாப்பாக கிராமத்திலிருந்து வெளியேற்றுவது, அவர்களுக்கான பாதுகாப்பை எவ்வாறு வழங்குவது என அனர்த்த ஒத்திகை இடம்பெற்றது.

வவுனியா பாவற்குளம் நீர் நிரம்பிக்கொண்டிருக்கும் நிலையில் திடீரென குளம் உடைப்பெடுத்தால் குளத்தின் நீர் செல்லும் பகுதிகளை அண்டியுள்ள கிராமங்களான, பாவற்குளம் படிவம் 01, 04, 05, 06, சூடுவெந்தபுலவு, ஆண்டியாபுளியங்குளம், கந்தசாமிநகர் போன்ற கிராமங்களிலிருந்து மக்களை எவ்வாறு பாதுகாப்பாக வெளியேற்றி முகாம்களில் தங்க வைத்து பராமரிப்பது என்பது தொடர்பான அனர்த்த ஒத்திகை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.ஐ. கனீபாவின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற்றது.

இப்பாரிய ஒத்திகையின் போது ஏழு கிராமங்களை சேர்ந்த ஒரு தொகுதி மக்கள் வெளியேற்றப்பட்டு பொது மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிப்பு மற்றும் முதலுதவி, மருத்துவ ஒத்திகைகள் செய்யப்பட்டதுடன், கிராமங்களிலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் உதவிகளை மேற்கொண்டனர்.

இவ் ஒத்திகை நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர்கள், தாதியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250-281)




## கிளிநொச்சியில் மழையுடனான காலநிலையால்
# 34 ஹெக்டேயர் நெற்செய்கை அழிவு
## பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் கடந்த சில நாட்களாக நிலவிய மழையுடனான காலநிலையால் 34 ஹெக்டேயர் நெற்செய்கை அழிவடைந்திருப்பதாக பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பி.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



நாட்டில் நிலவிய மழையுடனான காலநிலையால் பலவேறு இடங்களிலும் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய மழையுடனான காலநிலையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரை தொடர்புகொண்டு வினவிய போது, கிளிநொச்சி மாவட்டத்திலே காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ளன.

இதில் பெரிய மற்றும் நடுத்தரக்குளங்களின் கீழ் பன்னிரண்டாயிரத்து 255 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும் சிறிய நீர்ப்பாசனக்குளங்களின் கீழ் 544 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், அதேபோல மானாவாரியாக 11 ஆயிரத்து 696 ஹெக்டேயரிலும் என மொத்தமாக 26 ஆயிரத்து 495 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும் இம்முறை காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அண்மையில் பெய்த மழை காரணமாக 34 ஹெக்டேயர் பயிர்ச்செய்கை முழுமையாகவும் 72 ஹெக்டேயர் பயிர்ச்செய்கைகள் 70 வீதமான அழிவுகளும் ஏற்பட்டுள்ளதாக எமது திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்டிருக்கின்றது.

இதேவேளை மழையுடனான காலநிலையால் கபில நிறத்தத்தி மற்றும் எரிபந்தம் ஆகிய நோய்த்தாக்கங்கள் ஏற்பட்டன.

இவை இனங்காணப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு நோய் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# வவுனியா நொச்சிமோட்டையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா நொச்சிமோட்டை பாலத்திற்கு அருகில் நேற்று முன்தினம் அதிகாலை 12.05 மணியளவில் கேரள கஞ்சாவுடன் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பதுளை நோக்கி பேரூந்தில் கேரள கஞ்சாவினை கடத்தி செல்வதாக வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நொச்சிமோட்டை பாலத்தடியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது இரண்டு கிலோ கேரள கஞ்சாவினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கேரள கஞ்சாவினை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பதுளை மாவட்டத்தினை சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரை பொலிஸார் கைது செய்ததுடன் கைப்பற்றிய கேரள கஞ்சாவினையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-2-281)

# வாகனங்களின் வேகத்தை குறைக்க வவுனியா பொலிஸார் புதிய யுக்தி



(பனிக்கன்குளம்)

போக்குவரத்து விதிகளை மீறி வேகமாக பயணிக்கும் வாகனங்களின் வேகத்தை குறைப்பதற்கான புதிய யுக்தியொன்றை வவுனியாவில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

ஏ-9 பிரதான வீதியில் பொலிஸ் அதிகாரிகளின் உருவங்களையொத்த பொம்மைகளை வடிவமைத்து வீதியோரங்களில் பொருத்தியுள்ளனர்.

இவ்வாறு பொருத்தப்பட்ட பதாகைகள் வாகன சாரதிகளுக்கு பொலிஸ் அதிகாரியொருவர் நிற்பது போன்று காட்சியளிப்பதனால் வாகனங்களின் வேகத்தை குறைப்பதோடு இந்த வேகத்தினால் இடம் பெறும் விபத்துக்களையும் குறைத்துக் கொள்ள முடியும் என எதிர்பார்த்துள்ளனர். (2-281)

# விபத்தினால் பலத்த காயம்; வயோதிப மாதுவின் கால் அகற்றம்

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 75 வயதான வயோதிப பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் அண்மையில் மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கிச்சென்ற டிப்பர் வாகனம் செட்டிகுளம் தபால்நிலையத்திற்கு அருகாமையில் சென்றுகொண்டிருந்தபோது அவ்வீதி வழியே மாடுகளை கலைத்துசென்ற வயோதிப்பெண்ணை மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிப பெண்ணை அப் பகுதியில் நின்றவர்கள் மீட்டுசெட்டிகுளம்பிரதேசவைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். காலில் பலத்த காயம் ஏற்பட்டமையால் அவருடைய ஒரு கால் அகற்றப்பட்டுள்ளது.

டிப்பர் சாரதி செட்டிகுளம் பொலிஸாரால் கைதுசெய்யபட்டு விளக்கமறியலில் வைக்கபட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250-281)

# 400 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள்



(பரந்தன்)

கிளிநொச்சியில் 400 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இனம் காணப்பட்ட 400 பேருக்கு கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்கு கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. கொழும்பு றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாரதிபுரம், சாந்தபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம், திருவையாறு, அம்பாள்நகர் போன்ற கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மூக்கு கண்ணாடிகளை பெற்றுள்ளனர். இந்நிகழ்வானது பாடசாலை அதிபர் பெ.கணேசன் தலைமையில் இடம் பெற்றது. (2-312)

## பூநகரி நகர்ப்பகுதியில்
# மின்குமிழ்கள் பொருத்தும் பணி விரைவில் ஆரம்பம்
## தவிசாளர் தெரிவிப்பு

(பூநகரி)

பூநகரி பிரதேச சபை எல்லைக்குள் 50 வோள்ட் கொண்ட 250 மின்குமிழ்கள் இரண்டொரு தினங்களில் முக்கிய கேந்திர நிலையங்கள், சந்திகள், பூநகரி நகர்ப்பகுதி ஆகியவற்றில் பொருத்தப்படவுள்ளதாக பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

"பூநகரி நகர்ப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது" என்ற செய்தி வலம்புரியில் வெளியானதைத் தொடர்ந்து நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு மின் உபகரணங்கள் யாவும் பல இலட்சக்கணக்கான ரூபாவிற்கு கொழும்பில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச சபைக்கு பொருட்கள் வந்து சேர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் வாரத்தில் மின்குமிழ்கள் வீதிக்கு பொருத்தப்படவுள்ளதுடன் பூநகரிப் பகுதி ஒளிமயமாக மாற்றம் பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-84)

# கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்க பூநகரியில் நடவடிக்கை

(பூநகரி)

பூநகரி பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மக்களால் கோரிக்கை விடப்பட்டதைத் தொடர்ந்து வீதிகளில் திரியும் படுத்து உறங்கும் கட்டாக்காலிகளை பிடித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கென கட்டாக்காலிகளை பிடிப்பதற்கான பிடிகாரர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

இதுசம்பந்தமான அறிவித்தலைப் பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேள கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பவர்களுக்கு அனுமதிக்கடிதம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# ஜனாதிபதி மைத்திரியால் ஜேர்மன் தூதுவர் கவலை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை போன்று ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி, இத்தாலியிலும் ஏற்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஜேர்மனில் 6 மாத காலங்கள் அரசாங்கம் ஒன்று இல்லாமல் ஜேர்மன் ஜனாதிபதி நாட்டை நடத்திச் சென்றார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அரசியல் இலாபங்களுக்காக இவ்வாறான போலித் தகவல்களை வெளியிட வேண்டாம் என ஜனாதிபதியிடம், இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கேட்டுள்ளார்.

அண்மையில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, "சில நெருக்கடிகள் காரணமாக அரசாங்கம் ஒன்று இல்லாத சந்தர்ப்பங்கள் தொடர்பில் உலகில் பல நாடுகள் உதாரணமாக உள்ளன.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலோ மெர்கல் அவ்வாறான சிக்கலுக்கு முகம் கொடுத்தார். அவர் புதிய அரசாங்கத்திற்கு அவசியமான பெரும்பான்மையை ஏற்படுத்துவதற்கு 6 மாதங்களுக்கு அதிகம் தேவைப்பட்டது என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இந்தக் கருத்து தொடர்பில் ஜேர்மன் தூதுவர் கூறுகையில், சரியான தகவல்கள் தெரியாமல் தனது அரசியல் இலாபத்திற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

புதிய தேர்தலுக்கு பின்னர் ஜேர்மனில் ஏற்பட்ட நிலைமை மற்றும் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியலமைப்பு நெருக்கடி ஒரு போதும் சமமான விடயமல்ல. ஜேர்மனில் ஏற்பட்ட நிலைமையை உதாரணமாகக் கொண்டு ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற அரசியலமைப்பு நெருக்கடியை நியாயப்படுத்த முடியாது என அவர் கூறியுள்ளார்.

தனது தேவைக்காக ஜேர்மன் நாட்டை இழுத்து செய்திகளை திரிபுபடுத்திக் கூற வேண்டாம் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜேர்மன் தூதுவர் இது தொடர்பில் இராஜதந்திரிகள் சிலருடன் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்குமாறு ஜேர்மன் தூதுவர் கோரிக்கை விடுத்த போதிலும் அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# கரையொதுங்கிய டொல்பின்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு, வாகரை, காயான்கேணி பகுதி கடற்கரையில் சுமார் 20 அடி நீளமான டொல்பின் ஒன்று இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. (இ-7)

# மதுபானம் அருந்திவிட்டு மனைவி பிள்ளைகளை தாக்கிய நபர் மறியலில்

(திருமலை)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மதுபானம் அருந்தி விட்டு மனைவி பிள்ளைகளை தாக்கிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபரை இம்மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

பாலையூற்று, பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் மதுபானம் அருந்திவிட்டு வீட்டுக்குச் சென்று மனைவி பிள்ளைகளை தாக்குவதாக மனைவியால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

# "விண்மீன்களைத் தலைமீது சூடிவானகம் ஆளும் அரசியின் அமலஉற்பவ விழா"



இன்று 08.12.2018 கத்தோலிக்க திருச்சபை அன்னை மேரி மாதாவின் அமலஉற்பவ விழாவை உலகம் பூராகவும் கொண்டாடி மகிழ்கின்றது. அன்னை மரியா சுவக்கீன்- அன்னா தம்பதியினர் தவமிருந்து பெற்றெடுத்த இணையற்ற செல்வம். மனித மீட்பின் வரலாறு திருத்தி எழுதப்பட்ட வரலாற்றுநாள் உலகுக்குத் தெரிந்த நாள் தான் மரியாவின் அமலஉற்பவ விழாநாள். இறைவனின் மீட்பின் திட்டத்தில் அன்னை மரியாள் இறைவல்லமையால் தனது தாயின் வயிற்றில் எதுவித பாவமின்றி கருவானதைக் கொண்டாடும் மறை உண்மையின் விழா.

இயேசுவின் தாய் மரியா பிறப்பு நிலைப் பாவம் அல்லது ஜென்ம பாவமின்றி பிறந்தார் என்னும் கருத்தை மையப்படுத்தும் விழாவாக இந்த விழா அமைந்துள்ளது. பொதுவான கத்தோலிக்க விசுவாசத்திற்கமைய ஆதிப் பெற்றோரினால் தோன்றிய பாவம் உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையோடும் இணைந்து பிறக்கிறது. இது ஜென்மப் பாவம் என்று அழைக்கப்படுகிறது. இப்பாவம் மனிதரை கடவுளின் அருள் நிலையில் இருந்து பிரித்து, உலகின் தீய நாட்டங்களுக்கு அடிமை ஆக்குகிறது. கடவுள், உலக மீட்பரின் தாயாகுமாறு மரியாவை தொடக்கம் முதலே தெரிந்து கொண்டார். எனவே, மரியாவுக்கு மிகுதியான அருளைப் பொழிந்து, பாவமாசற்ற நிலையில் தாயின் வயிற்றில் கருவாக உருவாகச் செய்தார். இதுவே, மரியாவின் அமலஉற்பவம் என்று அழைக்கப்படுகிறது.

### திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதரின் பிரகடணம்

திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் பத்திநாதர் 1854இல் மார்கழி 8ஆம் திகதி "மரியாளின் அமலஉற்பவத்தை" விசுவாசக் கோட்பாடாக அறிவித்தார். 1858இல் அன்னை மரியாள் லூர்து நகரில் பெர்னதத்துக்குக் காட்சிகொடுத்து:



"நாமே அமலஉற்பவம்"என்று தன்னைப் பற்றிச் சொன்ன போது இவ்வுண்மை உறுதியானது. இந்த இறையியல் உண்மையைத் திருச்சபையின் தொடக்க காலத்திலிருந்தே கத்தோலிக்கர்கள் நம்பி ஏற்றுக் கொண்டுள்ளனர். இது ஒரு மறையுண்மையும் கூட. கடவுளின் தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மரியாவை இறைவன் தாயின் கருவிலேயே தூய்மை நிறைந்தவராக உருவாக்கினார் என்பதே இந்த விசுவாச சத்தியத்தின் பொருள். "நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் திருமுன் விளங்கும் படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாக தேர்ந்தெடுத்தார்" என்று பைபிளில் எபேசியர் புத்தகத்தில் 1:4என்னும் இறைவார்த்தை கூறுகிறதை நாம் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். எனவே இந்த மீட்பின் திட்டத்தில் நம் ஒவ்வொருவருக்கும் ஒருபங்கு உண்டு என்பதை உணர்த்தும் விழாதான் இந்த அன்னையின் அமலஉற்பவவிழா.

### வரலாறு அன்னையின் அமலஉற்பவ விழா

கி.பி. 5ஆம் நூற்றாண்டில், மார்கழி 9ஆம் திகதி கீழை கிறிஸ்தவ திருச்சபை முதன்முதலாக "கடவுளின் அதிதூய அன்னையின் மாசற்ற அமலோற்பவம்" என்ற பெயரில் இவ்விழாவை சிரியாவில் கொண்டாடியது என அறிய முடிகிறது. ஆனால் புனித அன்னாவின் வயிற்றில் கன்னி மரியாள் கருவாக உற்பவித்ததைக் கொண்டாடும் விழா கி.பி.7ஆம் நூற்றாண்டில் கீழைத் திருச்சபையில் பல இடங்களுக்கு பரவியது எனவும் அறிய முடிகிறது. கி.பி8 ஆம் நூற்றாண்டில், மார்கழி 8ஆம் திகதி "மரியாளின் உற்பவ விழா" மேலைத் திருச்சபையில் கொண்டாடப்பட்ட சான்றுகளை அக்காலத் திருப்பலி நூல்களில் காணமுடிகின்றன. 11ஆம் நூற்றாண்டில், "கன்னிமரியாள் தொடக்கப்பாவமின்றி உற்பவித்தார்" என்று கூறும் "அமலஉற்பவ நம்பிக்கை" உருவானது. 1050இல் கூடியவெர் செல்லி சங்கத்தில், மரியாளின் அமலஉற்பவத்துக்கான விழாவை திருத்தந்தை 9ஆம் லியோ பரிந்துரை செய்தார்.

பைசாந்திய பேரரசு முழுவதும் மரியாளின் அமல உற்பவ விழாவைக் கொண்டாடுமாறு, பேரரசர் முதலாம் மனுவேல் 1166ஆம் ஆண்டு ஆணையிட்டார். 1439இல் கூடிய பாசல்- புளோரன்ஸ் பொதுச்சங்கத்தின் அமர்வு, மரியாளின் அமல உற்பவத்தை உறுதி செய்தது. 1476 இல் மரியாளின் உற்பவ விழாவை அனைத்து இடங்களிலும் கொண்டாடுவதற்கு அனுமதி வழங்கிய திருத்தந்தை 4ஆம் சிக்ஸ்துஸ், 1477 மாசி 28ஆம் திகதி அதற்கான ஞானப் பலன்களை அறிவித்தார். திரெந்து பொதுச்சங்கம் (1545-1563), பிற்காலத்தில் இவ்விழா கொண்டாட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தது. இந்த பொதுச் சங்கத்தை அடுத்து, உருவான நாட்காட்டியிலும் இந்தவிழா இடம் பெற்றது. 1568இல், மரியாளின் உற்பவ விழாவுக்கான திருப்பலி மற்றும் திருப்புகழ்மாலை செபத்துக்கு திருத்தந்தை புனித 5ஆம் பியுஸ் அனுமதி வழங்கினார்.

17ஆம் நூற்றாண்டில், மரியாளின் உற்பவ விழா திருச்சபை முழுவதும் கொண்டாடப்பட்டது. 1708இல் திருத்தந்தை 11ஆம் கிளமெண்ட், மரியாளின் உற்பவ விழாவை கடன் திருநாளாக அறிவித்தார். திருத்தந்தை 14ஆம் கிரகோரி (1831-1846) காலத்தில், மரியாளின் அமலஉற்பவத்தை விசுவாசக் கோட்பாடாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. 1854 மார்கழி 8 ஆம் திகதி, "மரியாளின் அமலஉற்பவம்" குறித்த நம்பிக்கையை திருத்தந்தை 9ஆம் பியுஸ் திருச்சபையின் விசுவாசக் கோட்பாடாக அறிவித்தார். இதையடுத்து, "மரியாளின் அமலஉற்பவம்" என்றபெயரை இவ்விழா பெற்றது. 1969இல் சீரமைக்கப்பட்ட நாட்காட்டியில், இந்த திருநாள் பெருவிழாக்களின் பட்டியலில் உள்ளது.


### திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் கருத்து

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட், பாவத்தால் மனிதகுலம் இழந்த பல நன்மைகளை தன் மகன் வழியாக இறைவன் மீண்டும் தருவதற்கு திட்டம் கொண்டார். அதனால் ஓர் அருள் வடிகாலாக மரியாவைத் தேர்ந்தெடுத்தார். அருள் நிறைந்தவரே வாழ்க என்று அன்னை மரியாவை வாழ்த்தும் போதெல்லாம், அருள் வடிவான இறைவனை நமக்கு வழங்கியவர் அவர் என்பதை நாம் நினைவு கூர்கின்றோம் என்று கூறினார். **"வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார், அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார், நிலா அவருடைய காலடியில் இருந்தது, அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்."** என்று பைபிளில் திருவெளிப்பாட்டுப் புத்தகத்தில் 12:1 இறைவார்த்தையை மையமாக குறித்துக்காட்டி இந்தப் பெண் மரியாவே என்றார். இவர் முழுமையும் இறைவனின் ஒளியால் சூழப்பட்டு இறைவனில் வாழ்ந்தார் என்றும் திருத்தந்தை கூறினார்.

எனவே வானகம் ஆளும் அரசியை, வானவர் அனைவரின் தலைவியை, உலகில் பேரொளி உதயம் ஆகிய வாயிலை, மாட்சி மிகுந்த கன்னியை, ஆட்சி தகைமையின் தாயை, எழில்மிகு நாயகியை நாம் வேண்டுவோம். அவர் இயேசுவை வேண்டி அனைவருக்கும் அருளைப் பொழிந்திட வேண்டும் என்று.

**ம.பிரான்சிஸ்க்**
**சுதந்திர கத்தோலிக்க பத்திரிகையாளர்**

# அரசியல் நெருக்கடி நிலைக்கு விரைவில் தீர்வைக் காணுங்கள்



## பிரிட்டன் அமைச்சர் பீல்ட் மீள வலியுறுத்து

(லண்டன்)

இலங்கையில் அரசியல் நெருக்கடி தொடர்கின்ற சூழ்நிலையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது குறித்து ஆராய்ந்து வருவதாக பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அலுவலகத்திற்கான இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்துள்ள அமைச்சர் அனைத்துத் தரப்பினரும் வன்முறைகளை தவிர்ப்பதும் தற்போதைய நெருக்கடிக்கு கூடிய விரைவில் அமைதித் தீர்வை காண முயல்வதும் முக்கியம் என மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான எங்கள் உயர்ஸ்தானிகர் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் தொடர்ச்சியாக சந்தித்து வருவதுடன் பாராளுமன்ற அமர்வுகளில் சில உறுப்பினர்கள் செயற்பட்ட விதம் குறித்து எங்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கான வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்துள்ள அமைச்சர் 2019 இல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள எண்ணியுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)


## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை-கிளிநொச்சி

### 2019 ஆம் வருடத்திற்கு தேவையான வழங்கல்கள்/சேவைகள் பெற்றுக்கொள்ளல்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும், அதன் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கும் 2019 ஆம் ஆண்டிற்கான பின்வரும் வழங்கல்களுக்கு/ சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. வாகனங்கள் சுத்திகரிப்பு செய்தல் (01.01.2019 - 31.12.2019)
2. வாகனங்களுக்கான ரயர்கள் கொள்வனவு (01.01.2019 - 30.06.2019)
3. அலுவலக காகிதாகிகள் கொள்வனவு (01.01.2019 - 30.06.2019)
4. சுத்திகரிப்புப் பொருட்கள் கொள்வனவு (01.01.2019 - 30.06.2019)
5. வளிச்சீராக்கிகள் சுத்திகரிப்பு செய்தல் (01.01.2019 - 31.12.2019)
6. மின்பிறப்பாக்கிகள் சுத்திகரிப்பு செய்தல் (01.01.2019 - 31.12.2019)

1) 2019 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு இவ் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விலைக் கேள்விதாரர்கள் உரிய விநியோகத்திற்கேற்ற வகையிலான வியாபார பதிவுடையவராக இருத்தல் வேண்டும்.

2) விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ் குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள்/சேவைகள் என்பவற்றுக்கான பொருத்தமான ஆவணங்களை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை 08.12.2018 தொடக்கம் 21.12.2018 வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் 15.30 மணி வரை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

3) ஒரு வைத்தியசாலைக்கு அல்லது தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் சேவ்வக்கான ஒரு வழங்குநருக்கு ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

4) அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்ய்ப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

5) கேள்விப்பத்திரங்கள் 24.12.2019 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர் கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப் பெட்டியில் இடமுடியும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் "வழங்கல்கள்/சேவைகள் விபரம், விண்ணப்பிக்கும் வைத்தியசாலை" போன்ற விபரங்கள் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6) கேள்விகள் யாவும் 24.12.2019 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.

7) வைப்புத்தொகைகளும், ஆவணங்களும்.

| விடயம் | வழங்கல் சேவை எண்ணிக்கை | சேவைக்காலம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கான காலம் |
|---|---|---|---|---|---|
| வாகனங்கள் சுத்திகரிப்பு செய்தல் | 45 (வாகனங்கள்) | 2019/01/01-2019/12/31 | 1,000.00 | 30,000.00 | 23.03.2019 |
| வாகனங்களுக்கான ரயர்கள் கொள்வனவு | 45 (வாகனங்கள்) | 2019/01/01-2019/06/30 | - | - | - |
| அலுவலக காகிதாகிகள் கொள்வனவு | - | 2019/01/01-2019/06/30 | - | - | - |
| சுத்திகரிப்புப் பொருட்கள் | - | 2019/01/01-2019/06/30 | - | - | - |
| வளிச்சீராக்கிகள் சுத்திகரிப்பு செய்தல் | 50 | 2019/01/01-2019/12/31 | - | - | - |
| மின்பிறப்பாக்கி சுத்திகரிப்பு செய்தல் | 10 | 2019/01/01-2019/12/31 | - | - | - |

1. 01/01/2018 ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201, பொது 170 படிவம்) அத்துடன் வங்கி உத்தரவாதக் கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
3. கேள்வி நேரம் முடிவடைந்ததுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும் போது சமுகமளிக்கலாம்.
4. கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
5. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-4638)

**தலைவர், பெறுகைகள் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**


# "புலிகளின் அரசியல் பிரிவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு"

## சாடுகிறார் கம்மன்பில



(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவாக செயற்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் இருக்கும் புகைப்படம் ஒன்றையும் ஊடகவியலாளர்களுக்கு காண்பித்துள்ளார்.

மேலும், யானை - புலி ஒப்பந்தம் என்று கூறினால், சரியாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கலாம். 2001 ஆம் ஆண்டு புலிகளுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதானே இருக்கின்றது அவர்களை எப்படி புலிகள் என்று கூறலாம் என நீங்கள் கருதலாம். வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறியது போல் மறந்து போன மக்களுக்கு நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவாக செயற்பட்டது. பிரபாகரனுடன் சந்திப்பில் சம்பந்தன் கலந்து கொண்டார். உயிரிழந்த புலிகளின் தலைவர்களை நினைவு கூரும் நிகழ்வில் சம்பந்தன் கலந்து கொண்டார் என கூறியதோடு, அந்த நிகழ்வின் புகைப் படத்தையும் சான்றாகக் காண்பித்துள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புலிகளின் அரசியற்றுறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை அடிக்கடி சந்தித்து தமது அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியது எமக்குத் தெரியும், அன்று விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவாக செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது உயிரிழந்த புலிகளின் நோக்கங்களுக்காக செயற்பட்டு வருகிறது என்பதை நாங்கள் மிகவும் தெளிவாகக் கூறவேண்டும் எனவும் கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)

# கலை இலக்கிய பெருவிழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் 4 ஆம் நாள் நிகழ்வு இன்று 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 02.30 மணியளவில் சம்மாந்துறை பிள்ளையார் கோவில் அரங்கில், பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ்.கிருபாகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அரசாங்க அதிபர் உடுவை எஸ்.தில்லை நடராஜா, சிறப்பு விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் -கல்விப்பீட பௌனந்தி, கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் இ.குலசேகரம், கவிஞர் கே.ஆர். திருத்துவராஜா ஆகியோர் கலந்து கொள்வர் 5 ஆம் நாள் நிகழ்வான "சிறுவர் கலை அரங்கம்" நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், பண்டிதர், சைவப்புலவர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடமாகாண ஓய்வுநிலை பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை வங்கியாளர் கலாநிதி ச.வல்லிபுரநாதன், கலாபூஷணம் அண்ணாவியார் வே.கார்த்திகேசு ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# கேரள மழைவெள்ள பாதிப்புக்கு ரூ.3048 கோடி நிதி ஒதுக்கீடு

**-மத்திய அரசு பரிந்துரை-**



(திருவனந்தபுரம்)

488 பேரை பலி வாங்கிய கேரள வெள்ள பாதிப்புக்கு மத்திய அரசு கூடுதல் நிவாரண நிதியாக ரூ.3,048 கோடியை ஒதுக்கியுள்ளது.

கேரளாவில் கடந்த ஓகஸ்ட் மாதம் வரலாறு காணாத அளவுக்கு மழை பெய்தது.

இந்த கனமழை காரணமாக கேரளாவில் உள்ள அணைகள் மற்றும் நீர் நிலைகளுக்கு அதிகளவு தண்ணீர் வந்தது. பாதுகாப்பு கருதி ஒரே நேரத்தில் மாநிலத்தில் உள்ள அனைத்து அணைகளையும் திறக்கும் நிலை ஏற்பட்டது.

இதனால் கேரள மாநிலமே வெள்ளத்தில் மிதக்கும் சூழ்நிலை உருவானது. மாநிலத்தில் உள்ள 14 மாவட்டங்களும் வெள்ளக் காடானதால் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கும், நிவாரண முகாம்களுக்கும் இடம் பெயர்ந்தனர்.

இதுவரை இல்லாத அளவுக்கு கேரளாவையே புரட்டிப் போட்ட இந்த மழை வெள்ளத்தால் 488 பேர் உயிரிழந்தனர். பல ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்தன. விவசாய நிலங்கள் வெள்ளத்தால் சேதம் அடைந்தது. கேரளாவில் ஏற்பட்ட இந்த வெள்ள பாதிப்புகளுக்கு பல்வேறு நிலங்களில் இருந்தும் உதவிகள் கேரளாவுக்கு சென்றது.

மத்திய குழுவும் கேரளாவுக்குச் சென்று அங்கு ஏற்பட்ட வெள்ள சேதத்தை ஆய்வு செய்தது. முதல் கட்டமாக கேரளாவுக்கு ரூ.100 கோடி வழங்கப்பட்டது. அதன் பிறகு பிரதமர் நரேந்திர மோடியும் கேரளா சென்று வெள்ளப்பாதிப்புகளை பார்வையிட்டார்.

இதைத் தொடர்ந்து கேரளாவுக்கு ரூ. 500 கோடி நிவாரண நிதி வழங்க பிரதமர் உத்தரவிட்டார். அப்போது இந்த நிவாரண உதவிகள் முன்பணம் தான் என்றும் கேரளாவுக்கு அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டது.

கேரள அரசும் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் குறித்து மத்திய அரசிடம் அறிக்கை தாக்கல் செய்தது. வெள்ள பாதிப்புகளுக்கு ரூ.4 ஆயிரத்து 800 கோடி வழங்க வேண்டும் என்றும் கேட்டிருந்தது. இதை ஏற்று கேரள வெள்ளப் பாதிப்புக்கு கூடுதல் நிதியாக ரூ. 3,048.39 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது. (4)

# கச்சா எண்ணெய் வாங்கு[...] ஈரானுடன் இந்தியா புதிய ஒ[...]

## ட்ரம்ப் மிரட்டலை புறக்கணித்தது இந்தியா



ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை குறைத்துக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா தொடர்ந்து மிரட்டல் விடுத்து வருகின்றபோதிலும் அதனை இந்தியா புறக்கணித்துள்ளது. இந்திய ரூபாயை செலுத்தி கச்சா எண்ணெய் வாங்குவதற்கு ஈரானுடன் இந்தியா புதிய ஒப்பந்தம் செய்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக் காரத்தனமானது என்றும் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்தார்.

அதன் பிறகு ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன.

ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. மேலும் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் நவம்பர் 5 ஆம் திகதிக்கு பிறகு ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ட்ரம்ப் மிரட்டல் விடுத்தார்.

எனினும் ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் இறக் குமதி செய்வதற்கு விதிக் கப்பட்டிருந்த தடையிலி ருந்து இந்தியா, சீனா உள் ளிட்ட சில நாடுகளுக்கு அமெரிக்கா விலக்கு அளித்தது. ஈரானிடமிருந்து கொள்முதல் செய்யும் கச்சா எண்ணெய் அளவு கணிசமாகக் குறைந்து வருவது தெரியவருவதால் சீனா,

# ஐக்கிய நாடுகளின் தூதுவராக ஹெத்தர்

(வோஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஹெத்தர் நவெர்ட்டை, ஐக்கிய நாடுகளின் தூதுவராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரிந்துரை செய்துள்ளதாக ராஜாங்க திணைக்கள செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டிருந்து.



அதேவேளை, ஜனாதிபதி ட்ரம்ப் நேற்றுக்காலை தனது டுவிட் பதிவில், வெளியேறும் ஐ.நா. தூதுவர் நிக்கி ஹாலேயின் பணி யிடத்திற்கு நவெட்டை தெரிவு செய்துள்ளதாக பதிவிட்டிருந்தார். நிக்கி ஹாலே கடந்த ஒக்டோபர் மாதம் ஐக்கிய நாடுகள் தூதுவர் பதவியிலிருந்து விலகினார்.

ஹெத்தர் நவெர்ட் முன்னர் பொக்ஸ் நியூஸ் செய்தித் தொடர்பாளராகவும், நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் இருந்துள்ளார். அவருக்கு அரசியல் அல்லது கொள்கை தயாரிப்பு தொடர்பில் முன் அனுபவம் இல்லை.

இந்தநிலையில், அவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டமை தொடர்பாக செனட் சபையின் அனுமதியும் பெறப்பட வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நவெர்ட் கடந்த 2017 ஆம் ஆண்டு அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளராக நியமிக்கப்பட்டார். (4)

# புஷ்ஷின் இறுதி அஞ்சலி நிகழ்வில்; உலகத்தலைவர்கள் பலர் பங்கேற்பு



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ.புஷ்ஷின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் உலகத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாக 1989முதல் 1993ஆம் ஆண்டுவரை பதவிவகித்த ஜோர்ஜ் எச்.டபிள்யூ.புஷ், தனது 94ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்றுமுதல் அவரது பூதவுடலுக்கு பலரும் இறுதி அஞ்சலி செலுத்தி வந்ததோடு. தலைநகர் வோஷிங்டனில் நேற்று முன்தினம் அரச இறுதி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அதனை முன்னிட்டு நாடெங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டதோடு, அரச விடுமுறையும் வழங்கப்பட்டது.

அரச இறுதி அஞ்சலி நிகழ்வில், பிரித்தானிய இளவரசர் சார்லஸ், பிரித்தானிய முன்னாள் பிரதமர் ஜோன் மேஜர், ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கல், ஜோர்தான் மன்னர் அப்துல்லா உள்ளிட்ட பல்வேறு நாட்டுத் தலைவர்கள் பங்கேற்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முன்னாள் ஜனாதிபதிகளான பராக் ஒபாமா, பில் கிளிண்டன் உள்ளிட்ட அனைவரும் மனைவியருடன் ஒரே வரிசையில் அமர்ந்திருந்தனர்.

முன்னதாக மனைவி மெலனியா ட்ரம்புடன் வந்த டொனால்ட் ட்ரம்ப், ஒபாமாவுக்கும் அவரது மனைவி மிச்செல் ஒபாமாவுக்கும் கைகொடுத்தார்.

ஆனால் பில் கிளிண்டனையும் அவரது மனைவியும் முன்னாள் வெளியுறவு அமைச்சரு மான ஹிலாரி கிளிண்டனையும் பொருட்படுத்தவில்லை என ஊடகங்களில் செய்திகள் வெளி யாகியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது. (4)

# அலோக் வர்மாவின் அதிகாரத்தை ஒரே நாளில் பறித்தது ஏன்?

## உச்ச நீதிமன்றம் கேள்வி

(டில்லி)

குற்றப்புலனாய்வு திணைக்கள இயக்குநர் அலோக் வர்மாவின் அதிகாரத்தை ஒரே நாளில் பறித்தது ஏன் என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்கள இயக்குநர் அலோக் வர்மா, சிறப்பு இயக்குநர் ராகேஷ் அஸ்தானா இடையே ஏற்பட்ட அதிகார மோதலை தொடர்ந்து, இருவரும், பரஸ்பரம் ஊழல் முறைப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதனையடுத்து, இருவருக்கும் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டது. தன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில், அலோக் வர்மா மனு தாக்கல் செய்தார்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், இரண்டு அதிகாரிகளுக்கு இடையிலான மோதல், ஒரே நாள் இரவில் ஏற்படவில்லை. எனவே, ஒரே நாள் இரவில்



அலோக் வர்மாவின் அதிகாரத்தை, தேர்வுக்குழுவிடம் ஆலோசனை நடத்தாமல் பறித்தது ஏன்? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்பட்டதாக மத்திய கண்காணிப்பு ஆணையமான சி.வி.சி., கருதியதால் பாரபட்சமில்லாமல் நடவடிக்கை எடுத்தது என தெரிவித்தார். (4)

# பாகிஸ்தான் எதிர்க்[...] ஷாபாஸ் ஷெரீப் சி[...]

(இஸ்லாமாபாத்)

ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் ஷாபாஸ் ஷெரீப் விசாரணைக்கு பின்பு சிறையில் அடைக்கப்பட்டார்.

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் இளைய சகோதரரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ஷாபாஸ் ஷெரீப் (வயது 67), ஊழல் வழக்கில் கடந்த ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அவர் அங்குள்ள பஞ்



சாப் மாகாணத்தின் முதலமைச்சர் பதவியை வகித்த போது ஆஷியானா வீட்டு வசதி ஊழலில் ஈடுபட்டதாக பாகிஸ்தான் இலஞ்ச ஒழிப்பு பொலிஸ் (தேசிய பொறுப்புடைமை முகமை) குற்றம் சாட்டுகிறது.

இந்த வழக்கில் அவர் தொடர்ந்து பொலிஸ்




# ...துவதற்கு ...ஒப்பந்தம்

...யா



இந்தியா, கொரிய குடியரசு, துருக்கி, தாய்வான் உள்ளிட்ட நாடுகள் தடையி லிருந்து விலக்கு பெற தகுதி பெறுவதாக அமெரிக்கா தெரிவித்தது.

வர்த்தக ஒப்பந்தம், பொருளாதார நடவடிக் கைகளை வைத்து இந்த முடிவை அமெரிக்கா எடுத்தது. எனினும் ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமெரிக்கா அறிவுறுத் தியது.

அமெரிக்கா விலக்கு அளித்துள்ள நிலை யில் ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அந்நாட்டுடன் இந்தியா புதிய ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்படி வாங்கும் கச்சா எண்ணெய்க்கு, அமெரிக்க டொலருக்கு பதில் இந்திய ரூபாயில் பணத்தை செலுத்த ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஈரானிடம் இருந்து வாங்கும் கச்சா எண் ணெய்க்கு தரவேண்டிய தொகையை பாதிய ளவு பொருட்கள் ஏற்றுமதி செய்தும், மீதித் தொகையை ரூபாயாகவும் இந்தியா செலுத்த உள்ளது.

ஈரான் தேசிய கச்சா எண்ணெய் கழகத் தின் யூகோ வங்கி கணக் கில், இந்திய எண்ணெய் நிறுவனங்கள் செலுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமன்றி கச்சா எண்ணெய் விலைக்கான பாதியளவு தொகையை பொருட்களை ஏற்றுமதி செய்து இந்தியா செலுத்தவுள்ளது.

அமெரிக்கா தடை விதித்துள்ளபோதிலும், உணவு தானியங்கள், மருந்து பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றை இந்தியா ஏற்றுமதி செய்கிறது. அதற்கு நிகரான தொகை ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும்போது கழித்துக் கொள்ளப்படும். டொலருக்கு பதிலாக இந்திய ரூபாயை செலுத்த இருப்பதால் இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு குறையா மல் பார்த்துக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# சீனத் தொலைத்தொடர்பு நிறுவன தலைவரின் மகள் கடனாவில் கைது

(ஒட்டவா)

சீன நாட்டின் தொலைத் தொடர்பு நிறுவன தலைவரின் மகள் மெங்வான்ஜவ் கனடாவில் கைது செய்யப் பட்டுள்ளார்.

சீன நாட்டின் தொலைத் தொடர்பு நிறுவன தலைவரின் மகள், கனடாவில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுகிறார். இந்த நடவடிக்கை, சீனாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவை சேர்ந்த பிரபல பன்னாட்டு தொலைத் தொடர்புநிறுவனம்ஹுவாய். இந்த நிறுவன தலைவர் ரென் ஜெங்பெய். இவரது மகள், மெங்வான்ஜவ்.

இவர் அந்த நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி ஆவார். இவர் கனடா நாட்டில் வாங்கூவர் நகரில் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார். இதுபற்றிய தகவலை இப்போது தான் கனடாவின் நீதித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அவரை தங்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது. எனவே அவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுகிறார்.

அதே நேரத்தில் மெங்வான்ஜவ் எதற்காக கைது செய்யப்பட்டுள்ளார் என்பது பற்றிய கூடுதல் விபரங்கள் வெளியிடப்படவில்லை. இருப்பினும் இது சீனா வுக்கு அமெரிக்கா மீது கடும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் பனிப்



போர் நிலவி வந்தது. அது வர்த்தகப்போராக மாறியது. இது உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.


இந்த நிலையில், கடந்த முதலாம் திகதி ஆர்ஜென்டீனா தலைநகர் பியூனஸ்அயர்ஸ் நகரில் 'ஜி-20' உச்சி மாநாட்டின் இடையே அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், சீன ஜனாதிபதி ஜின்பிங்கும் சந்தித்து பேசினர். அதில் இரு தரப்பு வர்த்தக போரை நிறுத்தி வைக்க உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி, ஜனவரி முதலாம் திகதி முதல் அமெரிக்க பொருட்களுக்கு சீனாவும், சீனப்பொருட்களுக்கு அமெரிக்காவும் கூடுதல் வரி விதிக்கப்போவதில்லை. 90 நாட்களுக்கு இது நீடிக்கும். அதற்குள் இரு தரப்பும் பேசி தங்கள் பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள் ளது.

இந்த நிலையில் இப்போது சீன தொலைத்தொடர்பு நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி மெங்வான்ஜவ் கைது செய்யப்பட்டிருப்பது இரு தரப்பு உறவில் மேலும் உரசலை உருவாக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4)

# ...ல்; ...ற்பு

..., அரச ..., பிரித் ...ரித்தா ...மேஜர், ...ர்க்கல், ...ள்ளிட்ட ...கேற்ற ... ட்ரம்ப், ...ஒபாமா, ...வரும் ...மர்ந்தி ... ட்ரம்பு ...வுக்கும் ...வுக்கும் ... அவரது ...அமைச் ... பொரு ... செய் ...விக்கப் (4)

# ஈரானில் தற்கொலை படைத்தாக்குதல் இரு பொலிஸார் உடல் சிதறி உயிரிழப்பு




(டெஹ்ரான்)

ஈரான் நாட்டில் சபாஹர் நகரில் தற்கொலைப் படையினர் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் பாதுகாப்பு பணியில் இருந்த 2 பொலிஸார் உடல் சிதறி பலியாகினர்.

ஈரான் நாட்டில் சபாஹர் துறைமுக நகரம் அமைந்துள்ளது. இந்த நகரிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் நேற்று முன்தினம் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த தற்கொலைப்படை பயங்கரவாதி ஒருவன், கார் வெடிகுண்டை வெடிக்க செய்தான். இந்த வெடிகுண்டு தாக்குதலில் அங்கு பணியில் இருந்த 2 பொலிஸார் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட சுமார் 50க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாக முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது. இந்த தாக்குதலில் அந்தப் பகுதியில் இருந்த கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் கடுமையாக சேதமடைந்தன.

இது தொடர்பாக பொலிஸார் நடத்திய விசாரணையில், வெடிகுண்டு தாக்குதல் நடத்த வந்த பயங்கரவாதி பொலிஸ் அலுவலகத்திற்குள் நுழைய முயன்றது தெரியவந்தது. (4)

# தொழிற்சாலையில் தீ விபத்து; 4 பேர் பலி; 45 பேர் படுகாயம்



(மெக்சிகோ சிட்டி)

டொமினிகாவில் உள்ள பிளாஸ்டிக் தொழிற்சாலையில் எரிவாயு கசிவு காரணமாக கொதிகலன் வெடித்து தீப்பிடித்ததில் 4 பேர் உயிரிழந்தனர்.

டொமினிகா தலைநகர் சான்டோ டொமிங்கோவின் வில்லாஸ் அக்ரிகோலஸ் பகுதியில் தனியாருக்கு சொந்தமான பிளாஸ்டிக் தொழிற்சாலை உள்ளது. இந்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் வழக்கம்போல் தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தபோது, கொதிகலன் திடீரென வெடித்துச் சிதறி தீப்பிடித்தது.

இதன் காரணமாக தொழிற்சாலையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. அருகிலுள்ள பள்ளி வளாகத்திற்கும் தீ பரவியது. தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து தீயை கட்டுப்படுத்தி மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். பள்ளி குழந்தைகள் உள்ளிட்ட 45 பேர் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் பல்வேறு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில்சிலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. எரிவாயு கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (4)

# ...க்கட்சித் தலைவர் ...சிறையில் அடைப்பு



...விசய ... வசதி ...இலஞ்ச ...டைமை ...பாலிஸ்

காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்தார். இந்தக் காவல் முடிந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் லாகூர் தேசிய பொறுப்புடைமை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். அவரை மேலும் 15 நாட்கள் தங்கள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என இலஞ்ச ஒழிப்பு பொலிஸ் தரப்பில் சட்டத்தரணி வாரிஸ் அலி ஜான்ஜுவா வேண்டுகோள் விடுத்தார். ஆனால் அதை நீதிபதி சையத் நஜ்முல் ஹசன் நிராகரித்தார். ஷாபாஸ் ஷெரீப்பை வரும் 13 ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க அவர் உத்தரவிட்டார். இதையடுத்து அவர் காட் லக்பத் சிறையில் அடைக்கப்பட்டார்.

முன்னதாக அவரது கைது நடவடிக்கைக்கு எதிராக அவரது பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி தொண்டர்கள் போராட்டம் நடத்தினர். அப்போது அவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது. இதில் தொண்டர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. (4)

# அமெரிக்கப் போர் விமானங்கள் மோதல்

## 5 பேர் மாயம்

(டோக்கியோ)

ஜப்பானில் பயிற்சியில் ஈடுபட்டபோது அமெரிக்கப் போர் விமானங்கள் நடுவானில் மோதி கடலில் விழுந்தது. இதில் மாயமான 5 வீரர்களை அமெரிக்க மற்றும் ஜப்பான் படையினர் தேடி வருகிறார்கள்.


அமெரிக்க இராணுவம் உலகின் பல்வேறு நாடுகளிலும் இராணுவ முகாம்களை அமைத்துள்ளது. அதன்படி ஜப்பானிலும் இவற்றின் இராணுவ முகாம்கள் செயற்பட்டு வருகின்றன.

அங்குள்ள யுவாகுனி என்ற இடத்தில் அமெரிக்க கடற்படை தளம் இருக்கிறது. நேற்று முன்தினம் இரவு கடற்படை வீரர்கள் விமானத்தில் பறந்து போர் பயிற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது குண்டுவீச்சு விமானத்திற்கு மற்றொரு விமானத்தில் இருந்து இரவு நேரத்தில் பெற்றோல் நிரப்புவது தொடர்பான பயிற்சி கடற்பகுதிக்கு மேலே நடந்தது. எப்.ஏ.18 ரக போர் விமானத்துக்கு சி-130 என்ற பெற்றோல் கொள்கலன் விமானம் மூலம் எரிபொருள் நிரப்ப பயிற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது திடீரென 2 விமானங்களும் மோதிக் கொண்டன. இதில் அவை நொறுங்கி கடலில் விழுந்தது. எப்.ஏ.18 விமானத்தில் 2 வீரர்களும், சி-130 விமானத்தில் 5 வீரர்களும் இருந்தனர்.

உடனடியாக அங்கு மீட்பு பணி நடந்தது. ஜப்பான் கடற்படையை சேர்ந்த 9 விமானங்களும், 3 கப்பல்களும் மீட்புப் பணிகளில்



ஈடுபட்டன. அப்போது கடலில் மிதந்து கொண்டிருந்த 2 வீரர்களை மீட்டனர்.

அதில் ஒருவர் கவலைக்கிடமான முறையில் இருக்கிறார். மற்ற 5 வீரர்களை காணவில்லை. தொடர்ந்து அமெரிக்க மற்றும் ஜப்பான் படையினர் தேடி வருகிறார்கள்.

இதுதொடர்பாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறும்போது, இரவு நேரத்தில் நடுவானில் விமானங்களில் எரிபொருள் நிரப்புவது கடினமான விடயமாகும். இந்த பயிற்சியில் ஈடுபட்டதால் எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு விட்டது என்று தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜப்பான் பகுதியில் கடுமையான மேகக்கூட்டம் இருந்தது.

எனவே, வானிலை காரணமாக இரு விமானங்களும் மோதி இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (4)

# மிகவும் மோசமான ஜனநாயக மீறல் செயற்பாடுகளை ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார்

## ரஞ்சித் மத்தும குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக நாட்டில் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காணாது மிக மோசமான ஜனநாயக மீறல் செயற்பாடுகளை மாத்திரம் முன்னெடுத்து வருகின்றார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பாராளுமன்றத்தின் கோட்பாடுகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிக்க வேண்டும் தனக்கு விரும்பியவரை பிரதமராக நியமிக்க வேண்டும், பிடிக்காதவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று 19 ஆவது அரசியலமைப்பில் மாத்திரமல்ல 1978 ஆம் அரசியலமைப்பின் எத்திருத்திருத்தத்திலும் குறிப்பிடவில்லை எனவும் தெரிவித்தார்.



தன்னால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வை காண்பதை விடுத்து பிறரை குற்றம் சாட்டுவதால் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

ஜனாதிபதி தொடர்ந்து மாறுபட்ட தர்க்கங்களை குறிப்பிட்டுக் கொண்டு அரசியல் நெருக்கடியை தீவிரப்படுத்தி ஜனநாயக மீறல் செயற்பாடுகளை முன்னெடுப்பது அவரது அடுத்த கட்ட அரசியல் இருப்பிற்கும், நாட்டு மக்களுக்கும் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-4)

# கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி பரீட்சை எழுதிய மாணவன் கைதானார்

(பலாங்கொடை)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு கையடக்க தொலைபேசியுடன் பயணித்த தனியார் பரீட்சார்த்தி ஒருவர் பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளார்.

குறித்த பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்கு 20 நிமிடம் தாமதமாகி பிரவேசித்துள்ளதுடன் ஆங்கில வினாத்தாளுக்கு விடையளித்த விதம் தொடர்பில் பரீட்சை நிலைய பொறுப்பாளருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது அவர் கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி பரீட்சைக்கு தோற்றியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பின்னர் சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் பரீட்சார்த்தி பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# இலங்கையை புறக்கணிக்கும் சுற்றுலாப் பயணிகள்

## இரத்தாகும் முன்பதிவுகள்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிகளை அடுத்து, சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் வணிக முயற்சியாளர்களின் வருகைகள் வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அண்மைய அரசியல் குழப்பங்களுக்குப் பின்னர், 20 வீதமான அறை முன்பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று கொழும்பில் 200 அறைகளைக் கொண்ட, கோல்பேஸ் விடுதியின் முகாமையாளர் சந்திர மகோற்றி தெரிவித்துள்ளார்.

"வழக்கமாக எமது விடுதி நிரம்பியிருக்கும். முன்பதிவு ஒதுக்கீடு பயன்படுத்தப்படாது என்ற அச்சத்தினால் நாங்கள் தள்ளுபடிகளை வழங்குகிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, "பல்வேறு விமானங்களின் முன்பதிவுகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக ஐரோப்பாவில் இருந்தான பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன" எனவும் ஸ்ரீலங்கன் விமானசேவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் அரசியல் குழப்பங்களையடுத்து, இங்கு நடத்தவிருந்த கூட்டங்கள், நிகழ்வுகளை பல்வேறு நிறுவனங்களும் தென்கிழக்காசியாவுக்கு நகர்த்த ஆரம்பித்துள்ளன.

இதுகுறித்து, கருத்து வெளியிட்ட இலங்கை விடுதிகள் சங்கத்தின் தலைவர் சனத் உக்வத்த, "சிலர் இரத்துச் செய்திருக்கிறார்கள். சிலர் சிங்கப்பூர், இந்தோனேசியாவுக்கு மாற்றியிருக்கிறார்கள். கருத்தரங்குகள், கண்காட்சிகள் தொடர்பான முன்பதிவுகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை சுற்றுலா ஒழுங்கமைப்பு சங்கத்தின் தலைவர், ஹிரத் பெரேரா கருத்து வெளியிடுகையில், "இந்த நேரத்தில் முன்பதிவு குறைந்து விட்டது. இது கவலை தருகிறது.

தற்போதைய நெருக்கடி இழுத்தடிக்கப்படும் போது, அதன் தாக்கம் அதிகமாக இருக்கும். ஐரோப்பிய சுற்றுலா பயணிகள் மட்டுமன்றி, எல்லா இடங்களைச் சேர்ந்தவர்களும் இரத்துச் செய்கிறார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கம்யூட்டர் கண்டுபிடிக்கும்

எனக்கு வேண்டப்பட்ட ஒரு எழுத்தாளர்!

அவர் ஒருநாள் என்னிடம் வந்து காதோடு காதா... "சேர்... இனிமே நான் புத்தகம் எழுதுறதை விட்டுடலாம்ன்னு நினைக்கிறேன்"–என்றார்.

அவர் அப்படி முடிவு பண்ணினது ரொம்ப நல்லதுதான். இருந்தாலும் அதை அவரிடம் காட்டிக்கொள்ளாமல்... "ஏங்க... வீட்டுலே வேணாம்ன்னு சொல்றாங்களா?" என்று யதார்த்தமா கேட்டேன்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே! இப்பவெல்லாம் எழுத்தாளர்கள் பழைய புத்தகங்களிலேயிருந்து திருடி எழுதினால் அதை கம்பியூட்டர் கண்டுபிடிச்சுடுதாம்! நமக்கு என்னத்துக்கு சேர் வம்பு. அதுதான் இந்தத் தொழிலையே விட்டுடலாம்ன்னு நினைக்கிறேன்!" என்றார்.

இவர் இப்படி பயப்படுறதுலே அர்த்தம் உண்டு.

ஒருத்தருடைய படைப்பை இன்னொருத்தர் திருடி எழுதி வெளியிடுகிறார் என்று வச்சிக்குங்க...! அதை கம்பியூட்டர் மூலமா கண்டுபிடிச்சுடலாம்.

ஒவ்வொருத்தரும் எழுதுற முறை வித்தியாசப்படும். சொற்களை பயன்படுத்தப்படுற விதம், குறிப்பிட்ட சில சொற்களை பல தடவை பயன்படுத்துறது எழுத்தாளருடைய நடை இதையெல்லாம் கம்பியூட்டர் துல்லியமா ஆராய்ந்து... எழுதினவர் யார் என்கிறதைக் கண்டுபிடிச்சுடும்.

"சைலன்ட் டவுன்" –(Silent Dawn) அப்படி என்று ஒரு நாவல். சோவியத் இலக்கியத்திலே தலை சிறந்த நாவல்களில் இதுவும் ஒன்று!

ஆனா இதை எழுதினவர் யார் என்பதைப்பற்றி ஒரு சமயம் பெரிய சர்ச்சை எழுந்தது!

1920 இ லே "பாய்தர் குறையுகோ" –அப்படி என்கிறவரின் படைப்பைத் திருடி "மி கேயில் ஷைலோ கோப்" எழுதிவிட்டார் அப்படி என்கிறது குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டு உண்மையா? பொய்யா? எப்படி கண்டுபிடிக்கிறது?

இதைக் கம்பியூட்டர் மூலமா கண்டுபிடிக்கிறதுக்கு முயற்சி பண்ணினார் ஒரு நோர்வே நாட்டுப் பேராசிரியர். (சீர் கெஸம்ஸ) அவர் என்ன பண்ணினார் தெரியுமா?

அந்த ரெண்டு எழுத்தாளர்களுடைய வேறு வேறு படைப்புக்களிலே இருந்து ஆயிரம் ஆயிரம் வரிகளை எடுத்துக்கிட்டார், சர்ச்சைக்கு உள்ளான இந்த நாவலிலேயிருந்து ஆயிரம் வரிகளை எடுத்துக்கிட்டார். இது மூன்றையும் கம்பியூட்டர் கிட்டே கொடுத்தார்.

நடை, சொற்களை கையாண்டிருக்கிற பாங்கு, சொற்களின் பொருள் இது மாதிரி எட்டு அளவுகோல்களை அடிப்படையா வச்சிக்கிட்டு பகுத்து ஆராய்ந்து பார்த்தார். அதுக்கப்புறம் "ஷைலோ கோப்" தான் இதை எழுதினார். அதை அவர் திருடி எழுதலே! அப்படி என்கிறதை நிரூபிச்சுக்காட்டினார்.

இதே மாதிரி இன்னொரு சம்பவம்.

1985 இலே ஒரு பழைய பாடல் கிடைத்தது. அதை எழுதினது யார் என்று தெரியலை. பலர் பேர் பாடல்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தாங்க. அறிமுகப்படுத்திற வார்த்தைகள் கையாளப்படுகிற முறை இது மாதிரியான புள்ளி விபரங்களின் அடிப்படையிலே ஆராய்ச்சி பண்ணி பார்த்துட்டு இந்த பாடலை எழுதினவர் ஷேக்ஸ்பியரா இருக்கலாம் என்கிறதைக் கண்டுபிடிச்சாங்க!

எர்னஸ்ட் ஹைமிங்வேயின் "கடலும் கிழவனும்" ஒரு புகழ் பெற்ற நாவல். இது 1952 இலே வெளிவந்தது. ஆனா 1940 இற்குப் பிறகு அவர் குறிப்பிடத்தக்க அளவுக்கு எதையும் எழுதலே!

1952 இலே வெளிவந்த இந்த நாவலுக்கு "புலிட்சர் பரிசு" கிடைச்சுது. 1954 இலே ஹெமிங்வே நோபல் பரிசு பெற்றார்.

ஆனால் ஒரு இலக்கிய அறிஞர் (டாரேல் மான்ஷெல்) ஹெமிங்வே இதை 1936இல் தான் எழுதியிருக்கணும்ன்னு யூகிச்சார்.

உடனே அவரும் அவருடைய மாணவர் ஒருவரும் சேர்ந்து கிட்டு இதைக் கண்டுபிடிக்கிறதுக்கு முயற்சி பண்ணினாங்க.

கடலும் கிழவனும் என்கிற நூலிலே இருந்து 4500 வார்த்தைகள்–1933 முதல் 1951 வரைக்கும் ஹெமிங்வே எழுதின வேறு வேறு 4 நாவல்களிலேயிருந்து 4000 வார்த்தைகள் எடுத்துக்கிட்டாங்க. கம்பியூட்டர் மூலம் ஆராய்ச்சி பண்ணி பார்த்தப்போ இந்த "கடலும் கிழவனும்"நாவல் பின்னாடி எழுதப்பட்ட நாவல்களை விட 1936 இலே எழுதப்பட்ட "உலகின் தலைநகரை" என்கிற நாவலை ஒத்திருக்கிறது தெரியவந்தது.

அதனாலே இது 1936 இலே எழுதினது உறுதியாச்சு!

கம்பராமாயணத்திலே சுட சில பாடல்கள் கம்பரால் எழுதப்பட்டது. இல்லேன்னு ரசிகமணி டி.கே.சி.சொல்லுவார் இல்லையா?

அதையெல்லாம் சுட துல்லியமா கண்டுபிடிக்கிறதுக்கு வருங்காலத்திலே கம்பியூட்டர் உதவும் போல இருக்கு!

இப்படியெல்லாம் இருக்கிறப்போ ஆரம்பத்திலே என்கிட்டே வந்த அந்த நண்பர் அப்படி பயந்தது நியாயம்தானே!

ஒருத்தர் ஒரு சிறுகதையை எழுதி எடுத்துக்கிட்டு ஒரு பத்திரிகை அலுவலகத்துக்குப் போனார். ஆசிரியரைப் பார்த்தார். "சேர்... ஒரு அற்புதமான சிறுகதை எழுதி கொண்டு வந்திருக்கேன். பார்க்கிறீங்களா?

"என்ன தலைப்பு"–என்றார் அவர். வாழ்வு மலர்ந்தது என்று தலைப்பு குடுத்திருக்கேன்னார் இவர். அவர் இதை வாங்கி படிச்சுட்டு.. "வாழ்வு மலர்ந்தது என்கிறதுக்குப் பதிலா "மலர்ந்த வாழ்வு"–என்று இருக்கலாமே! என்றார். "ரெண்டும் ஒன்றுதானே சேர்!"–என்றார் இவர்.

"அதுக்கில்லே.. கதைதான் வரிக்கு வரி மாறாமல் அப்படியே இருக்கு. தலைப்பையாவது கொஞ்சம் மாத்தலாமே!"–என்று பார்த்தேன் என்றார் ஆசிரியர்.

"என்ன சொல்றீங்க?"–என்றார் இவர் ஒன்றும் புரியாமல்!

"பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இது நான் எழுதின கதை சேர் இது!" என்றார் அந்த ஆசிரியர்.

# இன உறவுகளைச் சிதைத்த சிங்களம் மட்டும் சட்டமும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலமும்



04

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அதன் அடிப்படை நீடித்து நிலைக்கக்கூடிய வகையில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளுக்கு சமநீதி கிடைத்தல் வேண்டும். அதற்கு இச்சிறு நூல் உதவிக்கரமாக அமைதல் வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்" என அவர் அந்நூலில் மொழிப்பிரச்சினை பற்றி தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

அவர் அந்நூலில் மொழிப்



பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க இலங்கை போக்குவரத்து சேவையை ஆரம்பித்தல் 1.1.1958

பிரச்சினை பற்றி மேலும் குறிப்பிடுகையில், நிர்வாக மட்டத்திலும் நிறைவேற்று மட்டத்திலும் ஏற்படும் அநீதிகளை சட்டங்களால் மட்டும் மாற்றியமைக்க முடியாது. எமது நடவடிக்கைகள் மூலமும் சிந்தனை மூலமும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். நாம் அனைத்து மனிதர்கள் மீதும் அன்பு செலுத்துவேரமானால் மேற்படி அன்பைப் புரியும் மொழிக்கு ஒலியோ வடிவமோ கிடையாது. சொற்கள் கிடையாது. மொழியை அடக்குமுறையின் ஆயுதமாகவும், பாகுபாடு காட்டுவதற்கான கருவியாகவும் சந்தேகத்தின் உபகரணமாகவும் கொண்டால் நாம் மனிதர்களுக்கும் மனிதத்துவத்திற்கும் பிணக்குகளுக்கும் சிக்கல்களுக்கும் உதவியாகவே அமைவோம். இந்நடத்தைகளை மாற்றியமைக்க வேண்டிய காலம் கூடுதலாகக் கழிந்து விட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

## டொனமூர் அறிக்கை கண்ட அநீதியான கவனிப்பு

1930களில் இலங்கைக்கு அவசியமான அரசியலமைப்பை உருவாக்குவதற்கு முன்னோடியாக, மக்களின் யோசனைகளைப் பெறுவதற்கு நியமனம்பெற்ற டொனமூர் ஆணைக்குழு சாட்சிகளைப் பதிவு செய்தது. அதில் கூறப்பட்ட கருத்துக்கள் பொதுவாக இவ்வாறு அமைந்திருந்தன. "இலங்கைத் தமிழ் மக்களுக்கு சட்டவாக்கத்துறை மூலம் ஏற்படும் அநீதிகளை விட நிர்வாக நிறைவேற்றுத்துறைகள் மூலம் அநீதிகள் ஏற்படுகின்றன அல்லது அவர்களின் உரிமைகள் தட்டிக்கழிக்கப்படுகின்றன." இக்கருத்துக்களைப் பற்றிய ஆணைக்குழுவின் அபிப்பிராயம் மூலம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"சிறுபான்மையினருக்கு ஏதாவது அநீதி ஏற்படுமாயின் நிர்வாக நடவடிக்கைகள் மூலமே அவை ஏற்படுகின்றன. ஏனெனில் அவற்றைச் சுலபமாகக் கண்டுபிடிக்கவோ அம்பலப்படுத்தவோ முடியாது"

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய நிலைமையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வளவு சட்டங்கள் இருந்தாலும் நிர்வாக நிறைவேற்று நடவடிக்கைகள் காரணமாக மேற்படி பாகுபாடு தொடர்ந்தும் இடம் பெறுகின்றது. என்று நூலின் ஆசிரியர் எஸ்.ஜீ. புஞ்சிஹேவா குறிப்பிடுகின்றார்.


## பஸ் போக்குவரத்துத் துறையை மக்கள் மயமாக்கப்படல்-1958

1957இல் நிறைவேற்றப்பட்ட போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம் பஸ் சேவையை மக்கள் மயப்படுத்தும் உத்தியோகபூர்வ வைபவம் 1958 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் பழைய பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. 76 தனியார் பஸ் நிறுவனங்களும் அவற்றிடம் இருந்த மூவாயிரம் பஸ் வண்டிகளும் அரசுடைமையாக்கப்பட்டன. அதன் பின்னரே பயணிகள் போக்குவரத்துச் சேவை இலங்கை போக்குவரத்து சேவையாக பெயரிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் தனியார் துறையொன்றை அரசாங்கம் பொறுப்பேற்ற முதலாவது சந்தர்ப்பமாக இது வரலாற்றில் பதிவாகியுள்ளது. பஸ் போக்குவரத்துத்துறையை அரசாங்கம் பொறுப்பேற்ற போது பயணிகள் போக்குவரத்து சேவை 22ஆயிரம் மைல்களுக்கு விஸ்தரித்திருந்தது. பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க இந்தத் துறையை மக்கள் மயப்படுத்தும் கருத்துத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். எனினும் அப்போதைய போக்குவரத்து அமைச்சராக இருந்த மைத்திரிபால சேனநாயக்க இதன் ஆரம்ப ஸ்தாபகராக விளங்குகின்றார்.

## ஊழியர் சேமலாப நிதியத்தை ஸ்தாபித்தல் - 1958

ஊழியர் சேமலாப நிதியமானது, தனியார் துறை ஊழியர்களின் எதிர்கால ஓய்வூதிய நன்மைக்காக பணியமர்த்துபவர்களாலும் மற்றும் ஊழியர்களி




அன்றைய தனியார் பஸ் சேவை (1932) கொழும்பு-மாத்தறை

னாலும் கட்டாயமாக பங்களிப்பு செய்யப்படவேண்டிய ஒன்றாகும். இந் நிதியமானது எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் ஆட்சியில் 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கம் ஊழியர் நிதிகள் சட்டத்தின் கீழ் 1958 ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் சமூக சேவைகள் அமைச்சராக கடமை புரிந்த அமைச்சர் தி.பி. இலங்கரட்னவால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் மூலம் உருவாக்கப்பட்ட சட்டம் ஆகும்.

இந்நிதியம்1958ஆம்ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி நிறுவப்பட்டது. இலங்கையிலுள்ள மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமாக விளங்கும் ஊ.சே. நிதியம் ரூ.1.8 ரில்லியனைத் தாண்டி, மேலும் அதன் சொத்து மட்டத்தை வளர்ச்சியுறச் செய்து பணித் தரத்தினை முன்னேற்றி அங்கத்தவர்களுக்கு நியாயமான வருவாய்களை வழங்குவதுடன் நிதியப் பாதுகாப்பினையும் தொடர்ந்தும் உறுதிப்படுத்தி வருகிறது.

## மே தினம் ஒரு பொது விடுமுறை நாளாக பிரகடனப்படுத்தப்படல் -1956

1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர்கள் சிலர், அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் கூடி தமது பணி நேரத்தை 8 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்துமாறு கோரி போராடியமையை நினைவுகூரும் வகையில், உலகம் முழுவதும் சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகின்றது. இதுதான் மே தினமாகும். இலங்கையில் இத் தினம் 1927 லிருந்து கொண்டாடப்படுகிறது. இலங்கையில் முதன் முதலாக 1956 ஆம் ஆண்டு தான் மே தினம் ஒரு பொது விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சியில் தொழில் அமைச்சராக கடமை புரிந்த அமைச்சர் தி.பி. இலங்கரட்னவால் பாராளுமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டு, ஒரு பொது விடுமுறை நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது. மலையக மக்களைப் பொறுத்தவரை 1965 ஆம் ஆண்டு தான் இந்த வாய்ப்பு கிடைத்தது.

இதைத் தொடர்ந்து மலையகத்தின் பல பகுதிகளிலும் மே தின ஊர்வலங்கள் கூட்டங்கள் நடத்தப்படுவது வழமையானது. பெரும்பாலும் தொழிற்சங்க ரீதியாகவே மே தின கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

## திருகோணமலை கடற்படைத் தளத்தை பிரிட்டிஷாரிடமிருந்து பொறுப்பேற்றல் -1957

பிரித்தானியர் இலங்கைக்கு 1948இல் சுதந்திரம் வழங்கிய போதிலும் கட்டுநாயக்காவிலிருந்த அரச விமான படைத்தளத்தையும் மற்றும் திருகோணம்லையில் இருந்த அரச கடற்படைத் தளத்தையும் 1957 ஆம் ஆண்டு வரை அவர்களே வைத்திருந்தார்கள்.

பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் அரசாங்கமே பிரித்தானியரை அங்கிருந்து வெளியேறும்படி கேட்டுக்கொண்டது. 1957ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி பிரித்தானிய அரசும் இலங்கை அரசும் இணக்கம் தெரிவித்து அறிக்கை விட்டன. அதன்படி 1957 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி திருகோணமலை அரச கடற்படைத் தளத்தை இலங்கை அரசு பாரமெடுத்தது. அதன்பின் அது இலங்கை கடற்படை வசமாகியது.

இதேபோன்று கட்டுநாயக்கா அரச விமான படைத் தளத்தை 1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி இலங்கை அரசு பாரமெடுத்தது. பிரித்தானிய அரசு இவ்விரு தளங்களையும் விட்டு முற்றாக வெளியேறியது 1960இல் ஆகும். தமிழ் மக்களின் கேந்திரத் துறைமுகமான திருகோணமலை கடற்படைத் தளத்தை தமிழ் மக்களைக் கலந்து கொள்ளாமல் இலங்கை அரசு பாரமெடுக்க தீர்மானிக்கப்பட்டதை தமிழ் அரசுக் கட்சி எதிர்த்தது.


## இலங்கையில் வாகன இலக்கங்களில் ஏற்பட்ட மாற்றம்.

இலங்கையில் வாகனங்கள் பதிவுசெய்யும் முறை (வாகனங்களுக்கு இலக்கத் தகடு போடும் முறை) 1903 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இலக்கம் ஆங்கில எழுத்து Q வில் தொடங்கி இலக்கமிடப்பட்டது.

(தொடரும்)

# தீர்ப்புக்குப் பின்னரே அடுத்த நடவடிக்கை

## ஐ.தே.க.முடிவு



(கொழும்பு)

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னரே, பிரதமரைத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதா என்பது உள்ளிட்ட அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சி முடிவெடுக்கும் என்று அக்கட்சியின் பேச்சாளர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பிரதமர் பதவிக்குப் பொருத்தமான ஒருவரைத் தீர்மானிப்பதற்காக, இரகசிய வாக்கெடுப்பு ஒன்றை நடத்த, ஐக்கிய தேசிய முன்னணி தயாராகி வருகிறது என வெளியான தகவல்கள் குறித்தே அவர், இவ்வாறு பதிலளித்துள்ளார். (இ-7)

# இல்லாத அதிகாரங்களை இருப்பதாகக் காட்டி தவறான தகவல்களை வழங்குகிறார் சபாநாயகர்

## கெஹலிய எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

"தனக்கு இல்லாத அதிகாரங்களை இருப்பதாகக் காட்டிக் கொண்டு சபாநாயகர் நாட்டு மக்களுக்கு தவறான தகவல்களை வழங்குகிறார்" என்று பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சபாநாயகர் தமது அதிகாரத்தை மீறிச் செயற்படுவதாலேயே ஊடகங்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கிறார். இக்காலங்களில் பாராளுமன்றில் எந்தச் செயற்பாடுகளும் இடம்பெறவில்லை. எனினும் அவர் அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்களை அழைத்துள்ளார்.

பாராளுமன்றை கூட்டியமை, சபையை ஒத்தி வைத்தமை விஷேட யோசனைகளை முன்வைக்கவுமே. எனினும் சபாநாயகர் விருப்பமானவர்களுக்கு விருப்பமான முறையில் பாராளுமன்றில் உரையாற்றுவதற்கு இடமளித்துள்ளார். அவர்கள் அனைவரும் ஊடகச் செயற்பாடு குறித்தே பேசினர், ஊடக செயற்பாடுகளைத் தடை செய்யுமாறே கூறினார்.

இதனால் சபாநாயகர் அனைத்து அரச ஊடக நிறுவனத் தலைவர்களையும் பாராளுமன்றிற்கு அழைப்பதற்கு உத்தரவிட்டார். இது தான் இவர்களது ஊடக சுதந்திரமாகும்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற நடவடிக்கைகள் கூட ஏனைய நாட்களைப் போலவே அமைந்திருந்தன. அந்தச் செயற்பாடுகள் சட்ட விரோதமானவை.

சட்டவிரோதமாக செயற்படுகின்ற பாராளுமன்றிலேயே அனைத்து உரைகளும் இடம்பெற்றன. பாராளுமன்றம் கூட்டுவது மற்றும் யோசனைகளை ஒத்தி போடுகின்றனர்.

ஒத்திவைப்பு வேளை பிரேரணை என்ற பெயரில் உறுப்பினர்கள் தொடர்ச்சியாக உரையாற்றினர். எனக்கு தெரிந்த வகையில் அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் பாராளுமன்றிற்கு சென்றனர்.


எமது ஆட்சிக்காலத்தில் அரச ஊடகங்களின் செயற்பாடுகள் எந்தவித தடையுமின்றி சுதந்திரமாக இடம்பெற்றன.

அதில் தலையிடுவதற்கோ அழுத்தம் கொடுப்பதற்கோ நாம் இடமளிக்கவில்லை என்பதை சகலரும் அறிவர். இரண்டு நாட்களுக்கு முன்னர் அவர்களின் குழு ஒன்று ஊடக நிறுவனங்களுக்கு சென்றிருந்தது.

அந்தக்குழு பாராளுமன்றச் சம்பிரதாயங்களையும் நிலையியற் கட்டளைகளையும் மீறியே செயற்படுகிறது" எனத் தெரிவித்தார். (இ-4)

# பொட்டம்மான் உயிருடன் உள்ளார் முரளிதரன் தெரிவித்தது முழுப்பொய்

## பொன்சேகா மறுப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவின் தலைவர் பொட்டம்மான் வெளிநாடொன்றில் உயிருடன் உள்ளார் என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளமை முழுப் பொய் என முன்னாள் இராணுவத்தளபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத்பொன்சேகா தெரிவித்தார்.

வெடிகுண்டை வெடிக்க வைத்து பொட்டம்மான் யுத்தத்தின் இறுதி தருணங்களில் தற்கொலை செய்து கொண்டார் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் இறுதி தருணங்களில் பிரபாகரனுடன் 75 போராளிகள் காணப்பட்டனர். அவர்களில் 70 பேர் வரை அவருடனேயே கொல்லப்பட்டனர் என சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இவர்களில் ஐவருடன் இணைந்து தப்பிச்செல்வதற்கு பிரபாகரன் திட்டமிட்டார் எனவும் சரத் தெரிவித்துள்ளார்.

அவர்களில் பொட்டம்மானும் ஒருவர் என தெரிவித்துள்ள சரத் பொன்சேகா பொட்டம்மான் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தார். அதன் பின்னர் தான் வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்து கொண்டார் என கே.பி. கூறினார் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பொட்டம்மான் நோர்வேக்கு தப்பிச்சென்றுவிட்டார் என தெரிவிக்கப்படுவது பொய்யான தகவல். பொட்டம்மானின் உடல் மீட்கப்பட்டதாக கே.பி. தெரிவித்திருந்தார்.

யுத்தம்இடம்பெற்றவேளை கருணா அம்மான் எனப்படுபவர் கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டு பாதுகாக்கப்பட்டார். எனினும் பிரபாகரன் எங்கிருக்கின்றார் என்ற தகவல்களை அவர் படையினருக்கு வழங்கவில்லை எனவும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் கருணா இரவுவிடுதிகளில் காணப்பட்டார். அவ்வாறான நபர் தற்போது அரசியல் நெருக்கடியின் போது கருத்துக்களை வெளியிடுகின்றார் எனவும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அவ்வேளை புலனாய்வு அமைப்புகள் ஊடாக கருணாவுக்கு நிதி வழங்கியது அவர் அதனை குடித்து அழித்துவிட்டார் எனவும் பொன்சேகா தெரிவித்துள்ளார். (இ-4)

# சீதனமாக வழங்கப்பட்ட கஞ்சா

## 13 இலட்சம் ரூபா பெறுமதியானது எனத் தகவல்

(வெல்லவாய)

வெல்லவாய பிரதேசத்திலிருந்து கண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டமணப்பெண் ஒருவருக்கு சீதனமாக வழங்கப்பட்ட 13 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவை பேருந்து ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

உடுநுவர வெலம் பொட பொலிஸார் குறித்த கஞ்சா போதைப் பொருளையும், அதனைக் கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

திருமண வீட்டுக்காக கொண்டு செல்லப்படும் சீதனப் பலகாரப் பெட்டிகள் என்ற போர்வையில் கார்ட்போர்ட் பெட்டிகளில் இந்தப் போதைப் பொருள் பொதியிடப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கண்டியை மையமாகக் கொண்டு கம்பளை, பேராதனை, கெலிஓயா உள்ளிட்ட மத்திய மாகாணத்தின் பல இடங்களுக்கு வெல்லவாய பிரதேசத்திலிருந்து கஞ்சா போதைப் பொருள் விநியோகம் செய்யப்பட்டு வந்ததாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

பேருந்தில் பயணம் செய்த குறித்த சந்தேக நபர்களிடம் விசாரணை செய்த போது மணப்பெண் ஒருவருக்கான சீதனப் பொருட்கள் அடங்கிய பெட்டிகளை வெல்லவாயவிலிருந்து கண்டிக்கு எடுத்துச் செல்வதாகத் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கஞ்சா போதைப்பொருள் அடங்கிய பதினமூன்று பெட்டிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இதன் சந்தைப் பெறுமதி 13 இலட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

# பாரிய வீழ்ச்சியை நோக்கி பொருளாதாரம்

## சிரேஷ்ட விரிவுரையாளர் புரசிங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி நிலைமை காரணமாக பொருளாதாரம் இன்னும் பாரிய வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானம் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளர் டெரன்ஸ்புரசிங்க தெரிவித்தார்.

"வெளிநாட்டு முதலீடு, வெளிநாட்டுக் கடன், சுற்றுலாத்துறையினரின் வருகை உட்பட பல்வேறு விடயங்கள் தடைப்பட்டுள்ளன. பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்துள்ளது. இதுவரையில், வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஜனவரி மாதத்தில் அரச செலவுகள் தொடர்பில் பிரச்சினையுள்ளது. இதுபோன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

இந்த அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் அதிகாரமோகமே ஆகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்பொழுது நாட்டில்பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் அரசியல் ஸ்திரத்தன்மை இன்மையே ஆகும் என்பதில்இரு கருத்துக்கள் இல்லை. அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் செயற்படாதிருக்கின்றார்கள் என்பதனால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பது அதன் விளக்கம் அல்ல.

எமது நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு பாரிய செலவுகள் பிரதான காரணமாகும். அந்தப் பாரிய செலவுகளில் பெரும்பங்கு இந்த மூன்று வகையான அமைச்சுக்களின் செயற்பாட்டுக்கே செல்கின்றது.

இந்த சிறிய நாட்டுக்கு மூன்று வகையான அமைச்சுக்களும், மாகாண அமைச்சுக்களும், உள்ளூராட்சி நிர்வாகமும் தேவையற்றது என மல்வத்து பீட மகாநாயக்க தேரர் அண்மையில் அச்சு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அரச செலவீனங்கள் அதிகரிக்கும் போது வரி அதிகரிக்கின்றது. வெளிநாட்டுக் கடன் அதிகரிக்கின்றது. இத்தனை சுமைகளையும் பொது மக்கள்மீது சுமத்தும்போது வாழ்க்கைச் செலவு அதிகரிக்கின்றது. இதனால், மக்கள் இயந்திரம் போன்று சமயம், கலாசாரம், குடும்பம், உறவுகள், சமூகம் என்பன மறந்து வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றான். வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய மக்கள் பணத்தின் பின்னால் நிம்மதியிழந்து தவிக்க நேரிடுகின்றனர்.

இந்நிலைமையைமாற்ற எப்போது நாம் முயற்சிக்கின்றோமோ அப்போதுதான் கடன் சுமையிலிருந்து நாம் விடுபடுவோம் என்பது ஒவ்வொரு சாதாரண பாமர குடிமகனின் உள்ளத்திலுள்ள ஒரே வகையான நாட்டுப் பற்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# கல்கிஸை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் அங்குலான உதார

(கல்கிஸ்ஸ)

கல்கிஸ்ஸ கல்டெமுல்ல பிரதேசத்தில் கடந்த 5 ஆம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தவர் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற லஹிரு சந்தருவன் எனும் அங்குலான உதார என்று தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவர் சில மாதங்களுக்கு முன்னர் போதைப் பொருள் மற்றும் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்கிஸ்ஸ கல்டெமுல்ல பிரதேசத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த நபர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கொனா கோவிலே ரோஹான் என்ற பிரபல பாதாள உலக குழுத் தலைவனின் நெருங்கிய சகா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குலான அஞ்சுலா என்ற பாதாள உலக குழுத் தலைவனின் சகாக்களே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

115



“டச்சுக்காரர் ஏற்கனவே இருந்த இயற்கை வளங்களை பூரணமாகத் தமது சொந்த இலாபத்திற்காக பயன்படுத்தினார் களேயொழிய மேற்கொண்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் எதனையும் அவர்கள் எடுத்திருக்க வில்லை என்பதாகும்.இந்நிலைமை காரணமாக டச்சுக்காரருக்குப் பின் மேற்படி தமிழ்ப் பிரதேசங்களில் சாயவேர் உற்பத்தி பற்றியோ பருத்தி உற்பத்தி பற்றியோ பேசுவதற்கே இடமில்லாமல் போயி ருக்கின்றது. இவ் உற்பத்தி ஒரு மறக்கப்பட்ட உற்பத்திப் பொருளாகப் போயிருப்பதை அவதானிக்க முடிகிறது”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

இதனால் துணிகளின் விலையை அதிகம் உயர்த்த முடியாம லிருந்தது. இந்நிகழ்வு உள்ளூர் உற்பத்தியாளரின் வருமானத்தை வெகுவாகப் பாதித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

டச்சுக்காரர் துணி வியாபாரத்தில் வருடமொன்றிற்கு 50 ஆயிரம் றிக்ஸ் டொலர்களை இலாபமாகப் பெற்றிருக்கின்றனர். இருந்தும் வன்னியிலிருந்து டச்சுக்காரருக்குத் தெரியாமல் பருத்தியைக் கொண்டு வந்த யாழ்ப்பாணத்து நெசவாளர்கள் நெசவாலைகளில் இட்டுத் துணிகளை நெய்து தரமான சாயமிட்டு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற நகரங்களில் விற்றிருக்கின்றார்கள்.

டச்சுக்காரர் இத்துணி வியாபாரத்தை தம் ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்தனர். இதனால் தமிழர் காட்டுப் பாதைகளால் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு தமது துணிகளைக் கொண்டு சென்று விற்றதன்மூலம் டச்சுக்காரரின் துணி வியாபாரத்தை ஓரளவு கட்டுப்படுத்தினர் என்றே கூறவேண்டும்.

1665 ஆம் ஆண்டு அறிக்கையின்படி யாழ்ப்பாணத்தில் 762 பேர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டதாக அறிய முடிகிறது. 1733 ஆம் ஆண்டு அறிக்கையின் படி 477 பேர் மன்னாரில் சாயத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

வன்னிப் பிரதேசத்தில் இத்தொழிலில் ஈடுபட்டவர்களின் தொகையை அறிய முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் தீவுப் பகுதிகளில் தரமான பருத்தி உற்பத்தி செய்யப்பட்டதாக 1665 ஆம் ஆண்டு அறிக்கை குறிப்பிடுகின்றது.

வன்னிப் பிரதேசத்தில் மிகப்பெரிய அளவில் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டமை பற்றியும் 1665 ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 1737 ஆம் ஆண்டுக் கணக்கறிக்கையில் சாயவேர் எவ்வளவு பெறப்பட்டதென்பது பற்றியும் விபரங்களை அறியமுடிகிறது.

1735 ஆம் ஆண்டில் மன்னாரில் 23,447 இறாத்தல் சாயவேர் பெறப்பட்டுள்ளது. இதன் அளவு 1736 ஆம் ஆண்டில் 19,517 இறாத்தலாகக் குறைந்து காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 1735 ஆம் ஆண்டில் 10,769 இறாத்தல் சாயவேர் பெறப்பட்டது. இதன் அளவு 1736 இல் 7,948 இறாத்தலாகக் குறைந்து காணப்பட்டது.

மேலும் 600 இறாத்தல் சாயவேரை டச்சுக்காரர் 10 றிக்ஸ் டொலர்கள் கொடுத்து வாங்கியிருக்கின்றார்கள். இப் புள்ளி விபரங்கள் எதனைக் காட்டுகின்றதெனில் சாயவேர் உற்பத்தி வெகுவாகக் குறைந்து செல்வதையும் சாயவேரை உற்பத்தி செய்யும் நடவடிக்கையை டச்சு அரசாங்கம் ஊக்கப்படுத்தவில்லை என்பதனையுமாகும்.

ஏற்கனவே இருந்த சாயவேர்களைப் பாவித்ததன் விளைவாகவும் மேற்கொண்டு சாயவேரைப் பெருக்கும் நடவடிக்கைகளில் டச்சு அரசாங்கம் அக்கறை கொள்ளாததாலும் மேற்படி நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

உதாரணமாக 1733 ஆம் ஆண்டு அறிக்கையின் படி மன்னாரில் சாயவேர் உற்பத்தி முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்ததாக இன்னுமோர் அறிக்கை மூலமாக அறிய முடிகிறது. டச்சுக்காரர் ஏற்கனவே இருந்த இயற்கை வளங்களை பூரணமாகத் தமது சொந்த இலாபத்திற்காக பயன்படுத்தினார்களேயொழிய மேற்கொண்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் எதனையும் அவர்கள் எடுத்திருக்கவில்லை என்பதாகும்.

இந்நிலைமை காரணமாக டச்சுக்காரருக்குப் பின் மேற்படி தமிழ்ப் பிரதேசங்களில் சாயவேர் உற்பத்தி பற்றியோ பருத்தி உற்பத்தி பற்றியோ பேசுவதற்கே இடமில்லாமல் போயிருக்கின்றது. இவ் உற்பத்தி ஒரு மறக்கப்பட்ட உற்பத்திப் பொருளாகப் போயிருப்பதை அவதானிக்க முடிகிறது.

நெல் உற்பத்தி யாழ்ப்பாணத்திலும் வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத்தை விட வன்னி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலைப் பிரதேசங்களிலேயே நெல் அதிகளவு உற்பத்தி செய்யப்பட்டது.

ஆனால் சனத்தொகைப் பெருக்கம் அதிகளவு ஏற்படத் தொடங்கியதன் விளைவு உள்நாட்டில் உற்பத்தியாகும் அரிசி போதாக்குறையாகவே இருந்தது.

யாழ்ப்பாணத்தில் தரிசாகக் கிடந்த காணிகள் நெற்பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டன. மேலும் தரிசாகக் கிடந்த அரச காணிகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன. இவ்வாறான காணி ஏலவிற்பனை யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1670களிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை நிகழ்ந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியிலும் ஆனையிறவை அண்டிய வன்னிப் பிரதேசங்களிலுள்ள காணிகளும் இவ்வாறு ஏலத்தில் விற்கப்பட்டன. இதன் மூலமும் டச்சுக்காரர் அதிக வருமானத்தைப் பெற்றார்கள்.

மேற்படி ஆனையிறவை அண்டிய வன்னிப் பிரதேசங்களில் ஏலத்தில் விற்கப்பட்ட காணிகளிலிருந்து 1721 ஆம் ஆண்டில் 30 ஆயிரம் றிக்ஸ் டொலர்களை டச்சுக்காரர் வருமானமாகப் பெற்றுள்ளனர். ஆனால் டச்சுக்காரர் ஆட்சியின் நடுப்பகுதியில் பணப்பயிர்கள் முக்கியத்துவம் பெற நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

(தொடரும்)

## அரசியல் நெருக்கடிகளைத் தீர்க்க

# ரணிலையும் மைத்திரியையும் ஒரே அறைக்குள் அடைக்கவும்

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் ஒரு அறைக்குள் அடைத்து விட வேண்டும் என ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"ஒன்றில் அவர்கள் ஒருவரை மற்றவர் கொலை செய்யட்டும். அல்லது ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக் கொள்ளட்டும்.

எவ்வாறாயினும் இரண்டு தனிநபர்களின் தனிப்பட்ட பிரச்சினைக்காக முழு நாடுமே பணயம் வைக்கப்படக் கூடாது.

தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, முதலில் ஜனாதிபதி யாருக்குப் பெரும்பான்மை இருக்கிறதோ, அவர்களிடம் அரசாங்கத்தைக் கொடுக்க வேண்டும்.

ஒரு சரியான அரசாங்கம் இல்லாமல், நாட்டை நீண்ட நாட்களுக்கு ஆட்சி செய்ய முடியாது. அதற்கென சில பணிகள் உள்ளன.

முதல் நடவடிக்கையாக, புதிய அரசாங்கத்தை கொண்டு வந்து, அரசியலமைப்பு சதியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு சிறப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவேண்டும்.

புதிய அரசாங்கம் நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை ஒழிப்பதுடன், அதற்குப் பின்னர் பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-4)

# எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் ஜனாதிபதிதான் பொறுப்பு - றிசாத்



(கொழும்பு)

கொலைச் சதி முயற்சி தொடர்பில் நாமல் குமாரவின் குரல் பதிவு வெளிவந்த பின்னரும் தமக்கிருந்த பாதுகாப்பு வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பானவரென்ற வகையில் ஜனாதிபதியே அதற்குப்பதில் சொல்ல வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அழைப்புக்கேற்ப அங்கு சென்ற றிசாத் சுமார் 3 மணி நேரம் கொலைச்சதி முயற்சி தொடர்பில் வாக்கு மூலம் வழங்கிய பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் கோத்தபாய ராஜபக்ஷவைக் கொலை செய்யச் சதி செய்யப்பட்டதாக ஊடகங்கள் மூலம் தெரிவித்த நாமல் குமார, பின்னர் அம்பாறை-மட்டக்களப்பில் வைத்து என்னையும் கொலை செய்ய திட்டமிட்டதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் எமது கட்சியின் தவிசாளர், செயலாளர் உட்பட எம்.பிக்கள் பொலிஸ் தலைமையகத்தில் முறையிட்டிருந்தனர்.

வடக்கில் நீண்ட காலமாக அரசியல் செய்பவனென்ற வகையிலும் அமைச்சரவை அமைச்சரென்ற வகையிலும் கட்சித் தலைவனென்ற வகையிலும் எனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறைக்கப்பட்டு இரண்டு பொலிஸாரே பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# எவராலும் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது - டில்ஷான்

(கொழும்பு)

"இன்றைய காலகட்டத்தில் அரசாங்கத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையால் யாரும் பெரும்பான்மையை நிரூபிக்க' முடியாது" என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் திலகரட்ண டில்ஷான் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே டில்ஷான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கிய அரசியலமைப்பின் ஒழுங்கு முறைகள் முறைப்படுத்தப்பட்டு மக்கள் விரும்பக் கூடிய பெரும்பான்மையுள்ளதோர் அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும்



நிலையான அரசாங்கம் ஒன்று இல்லாது ஜனாதிபதி மாத்திரம் இருக்கக் கூடிய அரசாங்கம் இருப்பதால் மக்களுக்குப் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலை மாற்றமடைய வேண்டும்.

இலங்கையில் ஒரு காலகட்டத்தில் இடம்பெற்ற யுத்த சூழலில் பாகிஸ்தானிற்குச் சென்று கூட கிரிக்கெட் விளையாட முடியாத நிலை காணப்பட்டது.

இலங்கை மக்கள் நிம்மதியற்ற நிலையில் அச்சதோடு வாழ்ந்த காலம் ஒன்று இருந்தது. இவையனைத்திற்கும் தீர்வைக் கொண்டு வந்தவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. ஒரு விளையாட்டு வீரன் என்ற வகையில் மக்களுடைய ஆதரவைப் பெற்றுள்ள நிலையில் இலங்கை மக்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் நான் நன்கு அறிவேன்" எனத் தெரிவித்தார். (இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1580

Search for people, places and things


### கண்மணி

தாங்கிப் பிடிக்க தாயும் தூக்கி நிறுத்த தந்தையும் இருக்கும் வரை எந்த உறவும் வீழ்ந்து போவதில்லை



### இளவரசி

சோதனைகள் நமக்கு வருவதே மனிதர்களை அடையாளம் காணத்தான்




### மணிகண்டன்

நிஜமில்லாதவரையும் நிதானமில்லாதவரையும் அதிகம் நேசிக்காதே அவஸ்தைகள் தான் வாழ்வில் மிஞ்சும்



### கண்ணபிரான்

பழகும் வரை உண்மையாய் இரு பழகிய பின்பு உயிராய் இரு



### இளஞ்செழியன்

அப்பிளில் தொடங்குகிறது ஆங்கிலம் தமிழில் உயிர் எழுத்தோ அம்மாவில்



### விமல்ராஜ்

மனசும் மணிப்பேர்சும் ஒன்றுதான்... சில்லறை விடயங்களை இறக்கி வைக்கும் வரை கனமாகத்தான் இருக்கும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனநாயகத்தை வலியுறுத்தி மட்டக்களப்பில் பேரணி!





(ஏறாவூர்)

ஜனநாயகத்தை வலியுறுத்தும் குரல் எனும் தொனிப்பொருளில் ரைஸ் ஸ்ரீலங்கா மற்றும் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வட கிழக்கு மறை மாவட்டம் என்பன இணைந்து பேரணியை நடத்தியுள்ளன.

மட்டக்களப்பு நகரின் காந்திபூங்காவுக்கு முன்பு நேற்றுக்காலை இடம் பெற்ற ஜனநாயகத்தை வலியுறுத்தும் குரல் பேரணியில் மதப் பிரமுகர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஜனநாயகத்தை வலியுறுத்துவதுடன் நிலையான அமைதியும் நிரந்தரமான சமாதானமும் ஏற்பட வேண்டுமெனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டன.

தாய் நாட்டின் நற்பெயரையும் ஜனநாயகத்தையும் கீழ் மட்டத்திற்கு கொண்டு வந்த வன்முறை அரசியல் கலாசாராத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் பேரணியில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

இந்தப் பேரணியில் கலந்து கொண்டோர் இலங்கையின் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான வரையறைகளுக்கு அப்பால் நடந்து கொண்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கோருவதாகவும் இதன்போது தெரிவித்து கையொப்பங்களையும்வைத்தனர். (இ-4)

# ரூ.34 இலட்சத்து 98 ஆயிரம் பெறுமதியான சிகரெட்டுகளுடன் சீனப் பிரஜைகள் சிக்கினர்





(கொழும்ப)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் தயாரிகப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களை இலங்கைக்குள் கொண்டு வர முயற்சித்த சந்தேக நபர்களை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சீனாவைச்சேர்ந்த ஆண்கள் இருவரும் பெண்ணொருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் கொங்கோவிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது அவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள், குறித்த நபர்களின் பயணப் பொதியைச் சோதனையிட்டபோது ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுக்களை மீட்டுள்ளனர்.

318 பொதிகளில் சுமார் 34 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 63 ஆயிரத்து 600 சிகரெட் பக்கெற்றுக்களைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைச் சுங்க அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## வெற்றிக்காக ஆயுதத்தை மாற்றிய மகிந்த



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்த காலகட்டத்தில் கிரக பலன்கள், மந்திர தந்திரங்கள் மீது நம்பிக்கை கொண்டு பல விடயங்களைச் செய்தார்.

அவரது நம்பிக்கைகளில் ஒன்று தான் அவரது கைகளில் வெவ்வேறு விதமான ஆபரணங்களை அணிந்திருப்பார்.

அத்தோடு இந்திரனின் கையில் உள்ள வஜ்ராயுதத்தை ஒத்த சிறிய ஆயுதமொன்றை மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்திலிருந்து தனது கையில் வைத்திருந்தார்.

இந்நிலையில் தற்போது குறித்த ஆயுதத்தை மாற்றி விட்டு கையில் அடங்கக் கூடியளவில் நீண்டதும் மெல்லியதுமான ஒரு ஆயுதத்தை வைத்துள்ளார். அதன் கீழ்ப்பகுதி புலியின் நகம் போலுள்ளது. இப் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.

இவ் விடயத்தை சிலர் விமர்சனத்திற்கும் உள்ளாக்கியுள்ளனர். (இ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 350 | 500 |
| தக்காளி | 250 | 280 | 300 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 200 | 200 | 200 | 280 |
| பூசணி | 80 | 50 | 40 | 80 |
| புடோல் | 120 | 120 | 110 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 300 | 260 | 250 | 250 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 250 | 200 | 210 | 120 |
| லீக்ஸ் | 200 | 100 | 150 | 200 |
| பீற்றூட் | 200 | 170 | 200 | 200 |
| கறிமிளகாய் | 250 | 240 | 250 | 250 |
| முருங்கைக்காய் | — | — | 300 | — |
| போஞ்சி | 150 | 160 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | — | 100 | 120 |
| கீரை - 1பிடி | 60 | 60 | 40 | 80 |
| தேசிக்காய் | 450 | 300 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 300 | 160 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — |
| முள்ளங்கி | 100 | 120 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | — | 120 | 80 |

# செய்தித்துளிகள்

## வெள்ளத்தால் மக்கள் அவதி



(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தை முன்பகுதியில் வெள்ளத்தால் சேறும் சகதியுமாக காணப்படுகிறது. இதனால் சந்தைக்கு பொருட்கள் வாங்க வரும் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இது தொடர்பில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-60)

## புதிய பணிமனை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சி.க.கூ.ச. சமாச (வ-து) புதிய பணிமனைத் திறப்பு விழாவும் கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் சிலை திறப்பு விழாவும் நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் தட்டாதெரு உப்புக்கடை ஒழுங்கை வளாகத்தில் யாழ்.மாவட்ட சி.க.கூ.ச. சமாசத் தலைவர் வீ.கே.அருந்தவநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன், வடமாகாண கூ.வே.ஆணைக்குழுச் செயலாளர் ந.திருலிங்கநாதன், இலங்கை சி.க.கூ.சங்கங்களின் சம்மேளனத் தலைவர் டாக்டர் பி.ஏ.கிரிவந்தெனிய, மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் ஏ.ஜெயசித் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## பிரதிகள் தமிழ் மொழியில் இல்லை எட்டு உறுப்பினர்கள் வெளிநடப்பு!

(அப்புத்தளை)

அப்புத்தளைப் பிரதேச சபையின் எட்டு தமிழ் உறுப்பினர்கள் நேற்றுச் சபை அமர்வினை புறக்கணித்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு அறிக்கை நேற்று அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட வேளை, அந்த அறிக்கையின் பிரதி தமிழ் மொழியில் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த எட்டு தமிழ் உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை சேர்ந்த 4 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர். (இ-7)

## கூரிய ஆயுதத்தால் கழுத்து வெட்டப்பட்டு பெண் கொலை

(பிலியந்தலை)

பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவித்தர பிரதேசத்தில் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 8 மணியளவில் பிலியந்தலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிலியந்தலை, வத்தப்பார, மாவித்தர பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பெண் ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார். உயிரிழந்த பெண் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதாகவும் கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## நீரில் மூழ்கி பெண் பலி

(வில்கமுவ)

வில்கமுவ - பேரகனத்த பிரதேசத்தில் வயோதிபப் பெண்ணொருவர் அவரின் வீட்டின் பின்புறத்தில் அமைந்துள்ள கால்வாயொன்றில் நீராடிக்கொண்டிருந்த போது நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

பின்னர் பிரதேசவாசிகளால் குறித்த பெண் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் 72 வயதுடைய வயோதிப பெண்ணொருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

## புதிய புகையிரத சேவை

(கொழும்பு).

பாடசாலை விடுமுறையை முன்னிட்டு மலைநாட்டுக்கான புகையிரத மார்க்கத்தில் விசேட புகையிரதம் ஒன்று சேவையில் ஈடுபடவுள்ளது.

புகையிரதக் கட்டுப்பாட்டு மையம் இதனைத் தெரிவித்துள்ளது. ஒவ்வொருநாளும் காலை 7.30 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் குறித்த புகையிரதம் பதுளை வரை பயணிக்கவுள்ளது.

மறுநாள் முற்பகல் 9.30 மணியளவில் பதுளையில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் குறித்த விசேட புகையிரதம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடையவுள்ளதாகக் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (இ-4)

# சிறுவர் அரங்கம்

## முதலாளியை ஏமாற்றிய கழுதை



பண்ணையபுரம் என்னும் சிற்றூரில் கிருஷ்ணன் என்ற உப்பு வியாபாரி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றி வெளியூரில் உள்ள சந்தைக்குப் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் அவன் சந்தைக்குப் போக வேண்டும்.

ஒரு நாள் கிருஷ்ணன் வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள ஆற்றை கழுதை கடந்த போது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கி விட்டன. எனவே, கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்து விட்டது.

கழுதை தவறி விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை நனைந்து, கரைந்து விட்டது. கழுதையை வியாபாரி மெல்ல தூக்கிவிட்டான். ஆனால், நீரில் மூழ்கியதால் உப்பு மூட்டை நனைந்தது அல்லவா? அது ஒரு சில நிமிடத்தில் அப்படியே, தண்ணீரில் கரைந்து பாதி மூட்டையாகி விட்டது.

எனவே, கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை வெறும் சாக்குப் போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. ஆஹா! என்ன ஆச்சரியம் இப்போது கழுதை முதுகில் சுமையே தெரியவில்லை.

கழுதைக்கு மிகுந்த சந்தோசம். ஆனால் வியாபாரிக்கு பெரிய நட்டம். உப்பு வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

மறுநாளும் வழக்கம் போல வியாபாரி உப்பு வியாபாரத்திற்கு கிளம்பினான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை கழுதைக்கு கனமாக இருந்தது. கழுதை மெல்ல நடந்து ஆற்றுப் பாலம் அருகே வந்தது. திடீரென அதற்கு முந்தைய நாள் நினைவு வந்தது. எனவே, மெல்ல தடுமாறுவது போல செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது.

அடுத்த நிமிடம் கழுதை முதுகிலிருந்த உப்பு மூட்டை நீரில் கரைந்து விட்டது. இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை இல்லாது போய் விட்டது.

கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்து இதையே செய்து வந்தது. இதனால் தினமும் வியாபாரத்திற்குப் போக முடியாமல் வியாபாரி தொடர்ந்து நட்டம் அடைந்தான்.

ஒரு நாள் வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். செல்லும் வழியில் கழுதை கொண்டு வருகின்ற உப்பு எப்படி காணாமல் போன்கின்றன என்று யோசித்துக் கொண்டே கழுதையின் நடவடிக்கைகளைக் கவனித்தான்.

கழுதை வேண்டுமென்றே ஆற்றுக்குள் விழுந்தது. அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரம் புரிந்தது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான்.

அன்று கழுதை முதுகில் வழக்கம் போல உப்பு மூட்டையை ஏற்றவில்லை. மாறாக, பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூட்டையை கழுதை முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம் போல ஆற்றுப் பாலத்தின் அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவது போல தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது.

மூட்டையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. அடக் கஷ்டமே! கழுதையின் முதுகில் இருந்த பஞ்சு மூட்டை முன்பை விட அதிகமாகக் கனத்தது. கழுதையும் மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது.

தனது ஏமாற்று வேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றிவந்த வியாபாரிக்குத் தெரிந்து விட்டத்தை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடக்க முடிவெடுத்தது அந்த கழுதை.

## பணிவு



பாலகர்களுக்கு பணிவை பற்றி சொல்லிக் கொடுப்பது கொஞ்சம் கஷ்டம் தான். ஆனால் நேர்மறையாக அவர்களிடம் உரையாடி, அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் பாசத்தையும் செலுத்துங்கள். அதுவே அவர்களுக்கு வாழ்க்கையில் பணிவை கற்றுக் கொடுக்கும். அவர்களின் உணர்வை காயப்படுத்தக் கூடாது என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

## விழிப்புணர்ச்சி



உங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதிக்கப் போகும் விடயங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். சுய அக்கறை மற்றும் சுய பாதுகாப்பைப் பற்றிக் கற்றுக் கொடுங்கள். இவைகளை அவர்களுக்கு கற்றுக் கொடுப்பதால், அவர்கள் பாதுகாப்பாக இருக்க கற்றுக் கொள்வார்கள்.

## பொன்மொழிகள்



"அச்சம் உன்னை நெருங்கும் முன் அதனைத் தாக்கி அழித்துவிட வேண்டும்"

மனித இனத்தின் மிகப்பெரிய எதிரியே அவர்களுக்குள் இருக்கும் பயம்தான். மனிதர்கள் வெற்றிக்குத் தடையாக இருப்பதும் பயம்தான். அந்தப் பயம் நெருங்கும் முன் அதனை நெருங்கிச் சந்திப்பதே அதனைத் தகர்த்தெறிவதற்கான முதல் வழி என்று கூறுகிறார் சாணக்கியர்.

அகங்கா்ரம் பலவீனமாகும். அது அமைதியை அழித்து விடும்!

– சுவாமி சிவானந்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீதி விசாரணையை வலியுறுத்தும் மன்னார் மனித எலும்புக்கூடுகள்

மன்னாரில் தோண்டத் தோண்ட மனிதப் புதைகுழி வந்தவண்ணமுள்ளமை தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மன்னாரில் சதொச வர்த்தக நிலையத்துக்கான கட்டிட நிர்மாணத் தேவைக்காக நிலத்தை அகழ்ந்தபோது மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன.

குறித்த நிலத்தில் மனிதப் புதைகுழி இருப்பதாகக் கருதப்பட்டு அந்த இடத்தில் அகழ்வு நடத்தப்படுகின்றபோது, மனித எலும்புகள் வந்த வண்ணமுள்ளன.

நேற்று முன்தினம் நடந்த அகழ்வில் மனித எலும்புக்கூடொன்று மீட்கப்பட்டது. இந்த எலும்புக்கூட்டின் இரண்டு கால்களும் கம்பியால் கட்டப்பட்டு இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இரண்டு கால்களும் கம்பியால் கட்டப்பட்ட நிலையில், எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளதெனில், சித்திரவதை செய்யப்பட்டு கொலை நடந்துள்ளதென்பது உறுதியாகின்றது.

இவ்வாறு ஒரு எலும்புக்கூடு கம்பியால் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது எனும் போது, அங்கு புதைக்கப்பட்ட ஏனைய மனித எலும்புக்கூடுகளுக்குரியவர்களும் சித்திர வதைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டபின்னர் அங்கு புதைக்கப்பட்டுள்ளனர் என்பது ஊர்ஜிதமாகிறது.

இவ்வாறு புதைக்கப்பட்டவர்கள் யார்? என்ற கேள்விகள் எழுந்து நிற்கின்றவேளையில், குறித்த எலும்புக்கூடுகள் தொடர்பில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதும் அந்த மனித எலும்புக்கூடுகள் கொலை செய்யப்பட்டிருக்கக்கூடிய ஆண்டு காலத்தை அறிந்து உரிய விசாரணை மேற்கொள்வதும் கட்டாயமானதாகும்.

இலங்கையில் கடந்த முப்பது ஆண்டு காலத்தில் நடந்த யுத்த சூழலில், படையினர் கைது செய்து காணாமல்போனவர்களின் எண்ணிக்கை கணிசமானது.

எனினும் காணாமல்போனவர்கள் தொடர்பில் இன்னமும் உரிய விசாரணை இடம்பெறவில்லை.

காணாமல்போனவர்களின் உறவுகள் எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்து இப்போது நீண்டநெடு நாளாய் தொடர் போராட்டங்களை நடத்திவருகின்ற நிலையில் அவர்களின் அவலம் குறித்து எவரும் கருசனை கொள்வதாகத் தெரியவில்லை.

உண்மையில் வெளிநாடுகளில் இப்படியான சம்பவங்கள் நடந்திருந்தால் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களில் ஒரு சிலரேனும் உண்மைகளை வெளிப்படுத்தியிருப்பர்.

ஆனால் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற வெறியில் மூழ்கியிருப்பவர்கள் காணாமல்போனவர்கள் பற்றிய தகவல்கள் எவற்றையும் இன்றுவரை வெளியிடாமல் இருக்கின்றனர்.

இந்நிலையில் மன்னாரில் மீட்கப்படுகின்ற மனித எலும்புகள் தொடர்பிலாவது நீதியான விசாரணை நடத்தப்பட்டால் பல உண்மைத் தகவல்கள் வெளிவர வாய்ப்புண்டு. நடக்குமா என்பதுதான் நம் கேள்வி.

## புலிகள் தொடர்பில் கருத்து
# விஜயகலாவின் வழக்கு பெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

விடுதலைப்புலிகள் தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணையானது நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரணை செய்த நீதவான், பெப்ரவரி மாதம் 22ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைப்பதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை விஜயகலா மகேஸ்வரன் கடந்த யூலை மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், இன்றைய சூழலில் தமிழீழ விடுதலைப்புலிகளை உருவாக்க வேண்டும் என்பதே எங்களுடைய முக்கிய நோக்கமென சர்ச்சையான கருத்தை வெளியிட்டிருந்தார். இவ்வாறு அவர் உரையாற்றியமை பெரும் சர்ச்சையை இலங்கை அரசியலிலும் மக்களிடத்திலும் ஏற்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

# பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத்தேர்வும் பிரயோகப் பரீட்சையும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரால் 2018.10.08ஆம் திகதி பத்திரிகை மற்றும் வட மாகாண சபை இணையத்தளம் மூலமாகக் கோரப்பட்ட ஆட்சேர்ப்பு விளம்பரத்திற்கு அமைவாக வடக்கு மாகாண தமிழ்மொழி மூலப பாடசாலைகளில் விஞ்ஞானத் துறை மற்றும் ஆங்கிலப் பாடம் ஆகியவற்றுக்கு நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 இற்கு விண்ணப்பித்திருந்தவர்களில் தகைமை பெற்றவர்கள் என வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் இனங்காணப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத்தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை எதிர்வரும் 18.12.2018 (செவ்வாய்க்கிழமை), 19.12.2018 (புதன்கிழமை) ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது. மேற் குறித்த நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் அன்றையதினம் தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத்தேர்வு அழைப்புக் கடிதம் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நேர்முகத்தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் 11.12.2018ஆம் திகதியன்று வட மாகாண கல்வி அமைச்சினை 021 320 2704 இலக்க தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், பிரயோகப் பரீட்சைக்கு தயார்படுத்த வேண்டிய விடயப் பரப்புக்கள் என்பனவும் நேர்முகத்தேர்வு அழைப்புக் கடிதத்துடன் விண்ணப்பதாராகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் அவ்விபரங்களை வடமாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் இணைத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியிலும் பார்வையிட முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

### தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட 288 தொண்டராசிரியர்களுக்கும் விரைவில் நியமனம் வழங்க கல்வி அமைச்சு மட்டத்தில் முடிவுகள் எட்டப்பட்டிருப்பதால் தங்களது பெயர் விபரங்கள் மற்றும் இறுதி நேர்முகத் தேர்வுக் கடிதங்களின் பிரதிகளுடன் தவறாது நாளை மறுதினம் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு வட மாகாண சங்கப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். (இ)

# கிராம அபிவிருத்திச் சங்க புதிய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்க புதிய கட்டடத் திறப்புவிழா நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மாவிட்டபுரம் அரசடி வீதியில (மாரி அம்மன கோவில அருகாமை) மாவிட்டபுரம் கி.அ.சங்கத் தலைவா எ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன், வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ, வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன், வலிகாமம் வடக்கு பிரதேசசபை உறுப்பினர் சே. கலையமுதன், கௌரவ விருந்தினர்களாக வலி. வடக்குப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.பரணீகரன், மாவிட்டபுரம் ஜே/ 231 கிராம உத்தியோகத்தர் கே.அஜந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# இப்படி இருந்தால்...

- எதையும் சாதிக்கலாம்- பொறுமையாய் இருந்தால்
- பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்-விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை இருந்தால்
- எளிதில் வசமாக்கலாம -விடா முயற்சியோடு இருந்தால்
- எளிதாக வெல்லலாம -நம்பிக்கையோடு இருந்தால்
- பொறாமையைத் தவிர்க்கலாம -பாராட்டும் குணம் இருந்தால்
- வெற்றியை அடையலாம் -தோல்வியைச் தாங்கிக்கொள்ளும் சக்தி இருந்தால்.
- சாதனைகளைப் புரியலாம் -சோதனைகளை எதிர்கொள்ள துணிவு இருந்தால் .
- பலத்தை புரிந்து கொள்ளலாம்-பயத்தை விலக்கி வாழத் தெரிந்துகொண்டால்
- நிதானத்தைக் கடைப்பிடிக்கலாம -பதற்றத்தை தவிர்த்து வாழக் கற்றுகொண்டால்
- நல்ல மனிதராக வாழலாம -மனதைக் கட்டுப்படுத்தி வாழத் தெரிந்திருந்தால்
- நிம்மதியாக வாழலாம் -சந்தேகத்தை தவிர்த்து சந்தோசமாக வாழத் தெரிந்திருந்தால்.

# வருடாந்த கலைவிழாவும் மாணவர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு செலலப்பா சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் நிலையத்தின் தலைவர் இ.தர்மலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில பிரதம விருந்தினராக புத்தூர் பிரதேச சபையின் சனசமூக உத்தியோகத்தர் சு.உதயசீலன் கலந்து கொள்வார். (இ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- வாழ்வில் ஒரு நன்மையாவது செய்யுங்கள். அதனால், பாவம் அனைத்தும் தீர்ந்து விடும்.
- பிறவிப்பிணி நீங்க வேண்டுமானால், ஆசையின் சாயலே அற்றுப் போய் விட வேண்டும். வேறெந்த முயற்சியும் வீணானவை தான்.
- யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டுஇருக்கட்டும். எதைச் சரி என்று நினைக்கிறீரகளோ அதை கடவுளின் வழியில் செய்து கொண்டிருங்கள்.
- பெண்ணுக்கு நாணமே ஆபரணம். அது இல்லாத பெண்ணைப் பெண் என்றே சொல்ல முடியாது.
- ஆசையை யாராலும் விலக்க முடியாது. உடம்பு என்ற ஒன்று இருக்கும்வரை அதுவும் இருந்தே தீரும். ஆனால், அதை கட்டுக்குள் வைக்க வேண்டும்.
- "கடவுள் என்னுடையவர்" என்ற சிந்தனையை விதைப்பதற்கு ஏற்றது குழந்தைப் பருவமே. பக்தியை குழந்தைப் பருவத்திலேயே கற்றுக் கொடுங்கள்.
- தாயும் தந்தையும் மகிழ்ச்சி அடைந்தால், கடவுளும் மகிழ்ச்சி அடைகிறார்.

# எல்லோரும் புஜாரா ஆகிவிட முடியுமா?
## இந்திய-அவுஸ்திரேலியாவுக்கிடையில் மூண்டது சண்டை



அவுஸ்திரேலியா - இந்தியா இடையிலான முதல் டெஸ்ட் அடிலெய்டில் நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற இந்திய அணி பட்டிங்தேர்வு செய்தது. கே.எல். ராகுல் (2), முரளி விஜய் (11), விராட் ஹோலி (3), ரகானே (13), ரோகித் சர்மா (37) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் இந்தியா 86 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து திணறியது. ஆனால் புஜாரா நிலைத்து நின்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தடுப்பாட்டத்தில் ஈடுபட்ட புஜாரா, 153 பந்தில் அரை சதம் அடித்தார். அதன்பின் 231 பந்தில் சதம் அடித்தார்.

அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சை திறமையாக எதிர்கொண்டு அணியை காப்பாற்றினார். புஜாரா 123 ஓட்டங்கள் அடித்ததால் இந்தியா முதல் இன்னிங்சில் 250 ஓட்டங்கள் சேர்த்தது.

2 ஆவது நாள் ஆட்டத்தில்

அவுஸ்திரேலியா 2 ஆவது இன்னிங்சை தொடங்கியது. இஷாந்த் சர்மா, பும்ரா, அஸ்வின் ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சை அவுஸ்திரேலியா பட்ஸ்மேன்களால் திறமையாக எதிர்கொள்ள முடியவில்லை. இதனால் அவுஸ்திரேலியா சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந்து கொண்டு வந்தது.

இதனால் 3 ஆவது வீரராகக்களம் இறங்கிய கவாஜா தடுப்பாட்டத்தில் ஈடுபட்டார். 125 பந்துகளை சந்தித்து ஒரு பவுண்டரியுடன் 28 ஓட்டங்கள் சேர்த்தார். முதல் ஓவரிலேயே களம் இறங்கிய அவர், 40 ஆவது ஓவரில் ஆட்டமிழந்தார். 40 ஆவது ஓவரை அஸ்வின் வீசினார்.

இந்த ஓவரின் 3 ஆவது பந்தை கவாஜா எதிர்கொள்ளும்போது பந்து கையுறையில் உரசி ரிஷப் பந்திடம் தஞ்சமடைந்தது. ஆனால் நடுவர் விக்கெட் கொடுக்கவில்லை.

இந்தியா ரிவியூ கேட்க, பின்னர் விக்கெட் கொடுக்கப்பட்டது.

கவாஜா கேட்ச் கொடுத்ததும் விக்கெட் கீப்பரான ரிஷப் பந்த், "இங்கே எல்லோரும் புஜாரா ஆகிவிட முடியாது" என்று ஸ்லெட்ஜிங்கில் ஈடுபட்டார்.

பந்தை சேதப்படுத்திய விவகாரத்திற்குப்பின் அவுஸ்திரேலியா எதிரணிகளை விரும்பும் வகையில் விளையாட வேண்டும் என்று கிரிக்கெட் வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த நிலையில் ரிஷப் பந்த் ஸ்லெட்ஜிங்கை தொடங்கி வைத்துள்ளார். வரும் நாட்களில் இரு அணி வீரர்களும் இதுபோன்ற ஸ்லெட்ஜிங்கில் ஈடுபட வாய்ப்புள்ளது. (க)

# அரியாலை நூற்றாண்டு
## துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிகள்

அரியாலை நூறாவது ஆண்டு சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, மென்பந்தாட்டம் மற்றும் கடினப் பந்து துடுப்பாட்டப் போட்டிகள் நடத்தப்பட்வுள்ளன.

கடினப் பந்துப் போட்டியானது இருபது - 20 போட்டியாக நடத்தப்படவுள்ளது. சம்பியனாகும், அணிக்கு 50 ஆயிரம் ரூபாயும் 2 ஆம் இடம்பெறும் அணிக்கு 30 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடம் பெற்ற அணிக்கு 20 ஆயிரம் ரூபாவும் பரிசுத் தொகையானது வழங்கப்படவுள்ளது.

மென்பந்தாட்ட துடுப்பாட்டப் போட்டியானது அணிக்கு 7 பேர் 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டமைந்ததாக நடத்தப்படவுள்ளது.

சம்பியனாகும் அணிக்கு 30 ஆயிரம் ரூபாவும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடம் பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபாவும், பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளது.

இந்த இரண்டு சுற்றுப் போட்டிகளுக்குமான அணிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் தற்போது கோரப்படுகின்றன.

பங்குபற்ற விரும்பும் அணிகள், ந.சுதேஸ்குமார் 077 617 6988, கவிந்தன் 077 309 5745, மதியழகன் 077 907 3792 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். (க-26)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# முதல்தரப் போட்டியிலிருந்து ஓய்வுபெற மாட்டேன்-கார்த்திக்



இந்திய அணியில் தற்போது முக்கிய வீரராக இருக்கும் தினேஷ் கார்த்திக் தமிழக அணிக்கு ரஞ்சி கோப்பை வென்று கொடுக்கும் வரை முதல் தர போட்டியிலிருந்து ஓய்வு பெற மாட்டேன் என்று அதிரடியாகக் கூறியுள்ளார். இந்திய அணி வீரரான தினேஷ் கார்த்திக் கடந்த 2004 ஆம் ஆண்டு இந்திய அணியில் அறிமுகமாகினார். சிறப்பாக விளையாடினாலும், டோனி வருகைக்கு பின் இவரால் அந்தளவிற்கு ஜொலிக்க முடியவில்லை.

இதனால் அவ்வப்போது இந்திய அணியில் இடம் பிடித்து வந்தார். ஆனால் தற்போது டோனி சொதப்பி வருவதால், அவருக்கு பதிலாக இளம் வீரர் ரிசப் பாண்ட மற்றும் தினேஷ் கார்த்திக் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டனர்.

இந்த இரண்டு பேரில் சிறப்பாக விளையாடும் வீரர்களே வரும் உலகக்கோப்பையில் சேர்க்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

ஆனால் தினேஷ் கார்த்திக் தான் அண்மைக்காலமாக தன்னுடைய சிறப்பான ஆட்டத்தைக் கொடுத்து வருகிறார்.


குறிப்பாக இருபது-20 போட்டியில் நிரந்தர இடத்தை பிடித்துவிட்டார். ஆனால் ஒருநாள் தொடர் மற்றும் டெஸ்ட் அணியில் இடம் கிடைக்காமல் திணறி வருகிறார்.

இந்நிலையில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டியில் கவனம் செலுத்துவதற்காக அம்பதி ராயுடு அண்மையில் தன்னுடைய ஓய்வை அறிவித்தார்.

இதேபோன்ற கேள்வி தான் தினேஷ் கார்த்திக்கிடம் செய்தியாளர்கள் கேட்டனர். அப்போது, முதல் தர கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதை பற்றி நான் யோசிக்கவே இல்லை.

தமிழ்நாட்டுக்காக ஆடுவதற்காக நான் மகிழ்ச்சி கொள்கிறேன். மாநில அணிக்காக ஆடுவது மிகப் பெரிய மகிழ்ச்சி. நான் தமிழ்நாட்டு அணியில் ஆடுவதை எப்போது அணி நிர்வாகம் பாரமாகக் கருதுகிறதோ, அந்த நொடி நான் ஓய்வு பெற்றுவிடுவேன். (க)

# வாய்ப்பை சரியாக பயன்படுத்தாமல்
## திணறும் ரோகித் சர்மா



அவுஸ்திரேலிய அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ரோகித் சர்மா தேவையில்லாத ஷாட் அடித்து அவுட் ஆகி பெவலியன் திரும்பினார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 9 விக்கெட் இழப்பிற்கு 250 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய அணியில் புஜாராவைத் தவிர மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறியதால் இந்திய அணி தடுமாறியது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டியில் வாய்ப்பு கிடைக்காமல் திணறிய ரோகித் சர்மாவுக்கு அவுஸ்திரேலிய தொடரில் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் அவர் கொடுத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தவில்லை என்று தான் கூற வேண்டும். 61 பந்துகளில் 3 சிக்ஸர் மற்றும் இரண்டு பவுண்டரிகள் என 37 ஓட்டங்கள் எடுத்து ஆடிக் கொண்டிருந்த போது தேவையில்லாத ஷாட் அடித்து அவுட் ஆனார். ரோஹித் சர்மா கவனக்குறைவுடன் விளையாடி அவுட்டான வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. (க)

# அதிரடிச் சதமடித்து
## தகுதியை நிரூபித்தார் இக்பால்




பங்களாதேஸ் அணியின் முன்னணி தொடக்க பட்ஸ்மேன் தமிம் இக்பால்.

இவருக்கு ஆசியக் கோப்பையின்போது மணிக்கட்டில் முறிவு ஏற்பட்டது. காயம் குணமடைந்து நேற்று மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான பயிற்சி ஒருநாள் ஆட்டத்தில் களம் இறங்கினார்.

முதலில் களம் இறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 331 ஓட்டங்கள் குவித்தது. ஷாய் ஹோப் 81 ஓட்டங்களும் சேஸ் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களும் குவித்தனர். பின்னர் 332 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஸ் கிரிக்கெட் போர்டு லெவன் அணியின் தமிம் இக்பால், இம்ருல் கெய்ஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இம்ருல் கெய்ஸ் 27 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து தமிம் இக்பால் உடன் சவுமியா சர்கார் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தமிம் இக்பால் 73 பந்தில் 13 பவுண்டரி, 4 சிக்சருடன் 107 ஓட்டங்கள் குவித்தார்.

இதன்மூலம் தனது உடற்தகுதியை நிரூபித்துள்ளார்.

சவுமியா சர்கார் 83 பந்தில் 7 பவுண்டரி, 6 சிக்சருடன் 103 ஓட்டங்கள் அடித்து களம் இருந்தார்.

பங்களாதேஸ் கிரிக்கெட் போர்டு லெவன் அணி 41 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 314 ஓட்டங்கள் அடித்திருக்கும் போது மழை பெய்தது.

இதனால் டக்வொர்த் லீவிஸ் விதிமுறைப்படி வங்காள தேச கிரிக்கெட் போர்டு லெவன் அணி 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (க)

## யாழ்.மாநகர...

கப்படாமல் ஆடம்பரமான பட்ஜெட்டாக காணப்படுவதால் குறித்த பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் சபையில் தெரிவித்தனர்.

எனினும், குறித்த பட்ஜெட்டைத் தோற்கடிக்கப்பட்ட பட்ஜெட்டாகத் தாம் கருதவில்லை எனத் தெரிவித்த யாழ். மாநகர சபையின் முதல்வர் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளுமாறும் சபை உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

பட்ஜெட்டை யாழ். மாநகர சபை முதல்வர் சபையில் சமர்ப்பித்த பின்னர் தனது கொள்கை விளக்க உரையை முடித்த பின்னர் பட்ஜெட்டை வாக்கெடுப்புக்கு விடுவதே முறையானதென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.எனினும் முதல்வர் அதற்குச் சம்மதிக்கவில்லை.

இந்நிலையில் பட்ஜெட்டில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதாக விருந்தால் இதனை நிராகரிக்கப்பட்ட பட்ஜெட்டாக ஏற்று செய்யத் தயாராகவிருப்பதாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தெரிவித்தனர். இந்தக் கூற்றை முதல்வர் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் பட்ஜெட்டுக்கான வருமான சீர்திருத்தங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

மாநகர சபையின் அமர்வு மதியநேர உணவு வேளையின் பின்னர் மீண்டும் ஆரம்பமான போது பட்ஜெட்டுக்கான செலவீன சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதம் ஆரம்பானது.

இதன்போது வருமானத்தில் 350 மில்லியன் ரூபாய் குறைகின்ற காரணத்தால் செலவைக் குறைக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. மக்களின் அபிவிருத்தித் திட்டங்கள் சார்ந்த செலவுகள் காணப்படாதததுடன் முற்றுமுழுதாக ஆடம்பரச் செலவுகளுக்கும், வெளிநாட்டுச் செலவுகளுக்கும், கடன்களுக்கும் இந்த பட்ஜெட்டில் அதிக நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே, செலவுகளை சீர்திருத்தி தகுந்த செலவீனமுள்ள பட்ஜெட்டை சபையில் சமர்ப்பிக்குமாறு மாநகர சபையின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான வரதராஜன் பார்த்தீபன், எம்.மயூரன் ஆகியோர் வலியுறுத்தினர். இதேபோன்று வருமானத்திற்குத் தகுந்தவாறு செலவு சீர்திருத்தங்களை மேற்கொண்டு பட்ஜெட்டை புதுப்பித்துச் சபையில் சமர்ப்பிக்குமாறு வேறொரு கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் வலியுறுத்தினர்.

இதனையடுத்து பட்ஜெட் வருமானத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் போன்று செலவீன சீர்திருத்தங்களையும் சபை உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டுமென யாழ். மாநகர சபை முதல்வர் கேட்டுக் கொண்டார். முழு செலவீன விபரங்களையும் தற்போது எங்களால் ஒவ்வொன்றாக எழுதிக் கணித்துக் கொண்டிருக்க முடியாது. 530 மில்லியன் ரூபாயுக்கான செலவீன விபரங்களையும் எங்களிடம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். எனவே, இந்த பட்ஜெட்டை தோற்கடிக்கப்பட்ட பட்ஜெட்டாகவே எங்களால் கருத முடியும்.இது தொடர்பில் நாம் கலந்தாலோசித்தே முடிவெடுக்க முடியுமெனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

எனினும், சபையின் முதல்வர் நிராகரிக்கப்பட்ட பட்ஜெட்டாக கருதக் கூடாது என அழுத்தமாகத் தெரிவித்தார். இதனையடுத்து சபையில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. இதன் போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி கட்சி இரு கட்சி உறுப்பினர்களும் இணைந்து கழுத்தறுத்து விட்டதாகவும் யாழ். மாநகர சபையின் முதல்வர் கடுமையாக குற்றச்சாட்டினார். குறித்த குற்றச்சாட்டிற்குப் பதிலளித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் எஸ்.கிருபாகரன் இரு பகுதியினரும் சேர்ந்து கழுத்தறுத்து விட்டதாக நீங்கள் கூறியிருந்தீர்கள். எங்களுக்கு ஈ.பி.டி.பியுடனருடன் சேர வேண்டிய அவசியமில்லை. எனவே, குறித்த குற்றச்சாட்டை வாபஸ்பெற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் எஸ்.கிருபாகரனுக்கும் யாழ். மாநகர சபை முதல்வருக்குமிடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து யாழ். மாநகர சபையின் முதல்வர் பட்ஜெட்டை வாக்கெடுப்புக்கு விடாமல் சபையை ஒத்தி வைத்தார். (ம-101)

## கழுத்தில் கத்தி...

நகைகள் 14 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் தீவிரமான விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## ஹெரோயினை...

கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று கொள்ளைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்றது. அதில் சிறைக் கைதி ஒருவர் முற்படுத்தப்பட்டார். அந்த வழக்கில் மற்றொரு சந்தேகநபரும் மன்றில் முன்னிலையானார். அவர் இந்த வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வழக்கு விசாரணை நிறைவடைந்தவுடன் வழக்கின் எதிரிக்கூண்டிலிருந்த கைதியிடம் மற்றைய சந்தேகநபர் சிறிய பொதி ஒன்றை கைமாற்றிக்கொண்டதை சிறைச்சாலை உத்தியோகத்தர் கண்டுள்ளார். அவர் அதனைத் தடுக்க முற்பட்ட போது சரையைக் கொண்டு வந்தவர் அதனை எதிரிக்கூண்டுக்குள் போட்டுள்ளார்.

விரைந்து செயற்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர் அந்தச் பொதியை எடுத்து சம்பவம் தொடர்பில் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். பொதியை ஆராய்ந்து அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தருக்கு நீதிவான் கட்டளையிட்டார்.

நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் பொதியை ஆராய்ந்த போது, அதற்குள் ஹெரோயின் போதைப் பொருள் இருந்தமை கண்டறியப்பட்டு நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஹெரோயின் போதைப்பொருளைக் கொண்டு வந்தவரைக் கைது செய்து விசாரணைகளைக்கு உட்படுத்தி மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு உத்தரவிட்டார். ஹெரோயினை எடுத்துவந்தவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-3)

## இரணைமடுவில்...

நிகழ்வில் ஜனாதிபதி பிரசன்னமாவதற்கு ஒரு மணித்தி யாலயத்திற்கு முன்னதாகவே நிகழ்வு இடம்பெற்ற இரணைமடு குளத்திற்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஜனாதிபதியுடன் நிகழ்வில் கலந்து கொள்ளாது பொது மக்கள் கூடியிருந்த இடத்திலேயே நின்றதுடன், ஜனாதிபதி நிகழ்வை ஆரம்பித்தவுடன் அங்கிருந்து சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் கரைச்சி மற்றும் பளை பிரதேச சபை தவிசாளர்கள் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே வட மாகாண பணிப்பாளர், மாவட்ட அரச அதிபர் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் சென்று கோரிய போதும் அவர் மறுத்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம்-3)

## 19ஆவது திருத்த...

இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார். அவரது அந்த அறிவிப்புத் தொடர்பிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இதனைத் தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்தைச் சீர்குலைப்பதற்காக அணிதிரண்டுள்ள துஷ்டசக்திகள், 19ஆவது திருத்தச் சட்டத்தையும் மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. குடிமக்களை பலவீனப்படுத்தி, அரசியல்வாதிகள் பலமாகிக்கொள்வதற்கு எதிராக, எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடத் தாம் தயாராக உள்ளோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது. (ம)

## அரசியல் பிரச்சி...

அதிகாரத்தை கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலும் பொதுத்தேர்தலும் ஜனவரியில் நடத்தப்படுமானால், பெப்ரவரியில் புதிய ஜனாதிபதி, புதிய அரசாங்கம், புதிய நாடாளுமன்றம் என்ற அடிப்படையில் புதிய நம்பிக்கையை கொள்ள முடியும்.

தற்போதைய பிரச்சினையை உருவாக்கியர் என்ற அடிப்படையில் ஜனாதிபதியே, இந்த ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராக முடியும் என்று கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் வலியுறுத்தியுள்ளார். (ம)

# ரணில் பொதுச்சொத்தை தவறாக பயன்படுத்தியுள்ளார்

## மகிந்த அணி குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொது சொத்தை தவறாக பயன்படுத்தியுள்ளதாக பொதுஜன பெரமுன குற்றம் சாட்டியுள்ளது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளை ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை அலரிமாளிகையில் வைத்து சந்தித்திருந்த நிலையிலேயே இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பிரதமர் பதிவில் இருந்து ரணில் நீக்கப்பட்டுள்ள நிலையில், வெளிநாட்டு இராஜதந்திரிகளை எப்படி அலரிமாளிகையில் வைத்து சந்திக்க முடியும் என நாடாளுமன்ற ஷேஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நிலவும் உட்கட்சி பூசல் காரணமாக பிரதமர் பதவிக்கு ரணிலை தவிர்த்து வேறு ஒருவரின் பெயரை பரிந்துரைப்பதில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடைந்துவிட்டது.

ஆனால், ஒரு போதும் ரணிலை பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெளிவாக கூறிவிட்டார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-3)

## உச்ச நீதிமன்ற தீர்ப்பை...

ராக விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை மேலும் இரு நாட்களுக்கு நீடிப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் நீதிமன்ற செயற்பாடுகளை பார்வையிட சென்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்த்தன, விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அதனை மதித்து ஏற்றுக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு நீதிமன்றத்தின் தீர்ப்பே தீர்வுகாணும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

## மகிந்த தாமா...

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தற்போதைய அரசியல் முட்டுக்கட்டைநிலை அடுத்த வருடம் ஒரு ராஜபக்ஷவின் தலைமையில் தெரிவுசெய்யப்படக்கூடிய அரசாங்கமொன்றுக்கு அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் அளிக்கக்கூடிய எதிர்கால ஆதரவுக்கு தங்களது தற்போதைய செயற்பாடுகள் கொண்டுவரக்கூடிய விளைவுகள் குறித்து மகிந்த ராஜபக்ஷவும் கோத்தபாய ராஜபக்ஷவும் சிந்தித்துப் பார்ப்பதற்கான முக்கியமான சந்தர்ப்பமொன்றை வழங்கியிருக்கிறது.

பிரதமர் ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு எதிராக இரு நம்பிக்கையில்லா தீர்மானங்களும் அரசாங்க அமைச்சுக்களுக்கு நிதியை நிறுத்துவதற்கான வேறு இரு தீர்மானங்களும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற போதிலும், பதவியில் இருந்து இறங்க அவர் மறுத்திருக்கிறார்.

அவரின் இந்த மறுப்பு இலங்கையின் அரசியலமைப்பு மீது அவருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இருக்கக்கூடிய பற்றுதலைக் கேள்விக்குள்ளாக்கியிருப்பது மாத்திரமல்ல, தங்களதும் கட்சியினதும் எதிர்காலத்துக்கு அநாவசியமான சேதத்தை ஏன் அவர்கள் ஏற்படுத்துகிறார்கள் என்ற கேள்வியையும் கிளப்புகிறது.' இவ்வருட முற்பகுதியில் ராஜபக்ஷவும் பொதுஜன பெரமுனவும் உள்ளூராட்சித்தேர்தல்களில் பெற்ற பெருவெற்றி இலங்கையில் அவர் தொடர்ந்தும் பெரும் செல்வாக்குடன் விளங்குகிறார் என்பதை தெளிவாக வெளிக்காட்டியது.

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படக்கூடும்.

அதில் போட்டியிடமுடியாதவாறு அரசியலமைப்பு மகிந்த ராஜபக்ஷவை தடுக்கிறது என்ற போதிலும் அவரது சகோதரர் பலம் பொருந்திய ஒரு வேட்பாளராக நிற்கக்கூடும்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து இறங்கி அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரமானதும் நேர்மையானதுமான போட்டியின் ஊடாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு உதவுவதை நோக்கி தனக்கிருக்கக்கூடிய கணிசமான அரசியல் ஆற்றலைப் பயன்படுத்துவதே விவேகமான செயலாக இருக்கும்.

அவ்வாறு அவர் செய்வாரேயானால், தற்போதைய அரசியல் முட்டுக்கட்டை நிலையை முடிவுக்குக் கொண்டுவரவும் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் புதிய அரசியல் மற்றும் இராஜதந்திர மோதல் விரிவடைகின்ற நிலையில் இலங்கையை வாய்ப்பான ஒரு அந்தஸ்தில் வைக்கவும் உதவ முடியுமென கூறியுள்ளார். (ம)

தன நிதானய
திகதி 2018-12-07
சீட்டிழுப்பு இலக்கம் 85
Z 13 24 61 79

கொவிசெத
திகதி 2018.12.07
சீட்டிழுப்பு இலக்கம் 1966
R 11 15 22 47

மஹஜன சம்பத
திகதி 2018/12/07
சீட்டிழுப்பு இலக்கம் 3806
V 6 0 0 0 7 0

மெகா பவர்
திகதி 07/12/2018
சீட்டிழுப்பு இலக்கம் 315
C 23 14 22 27 58

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

VIJAENTHIRAN MATHEMATICS CENTER
K.K.S வீதி, நாச்சிமார் கோவிலடி
இணைந்த கணிதம்- தனி, குழு வகுப்புக்கள்
ஆசிரியர்: தெ.விஜேந்திரன் (BSc, Dip in Ed)
A/L - 2019, 2019 Day, 2020
2019 Day பிரிவு - 3 ஆரம்பம்: 10.12.2018 திங்கட்கிழமை
பி.ப 4.00 - 6.00
தொடர்புகளுக்கு: 0774413087

பணிப்பெண் தேவை
வீட்டுவேலைக்கு 18 - 30 வயதிற்கிடைப் பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களைச் சேர்ந்த பணிப் பெண் தேவை. 071 221 5415, தொடர்புகளுக்கு: 077 736 4077

லொறி விற்பனைக்கு
TATA 2515 மொடல் 10weel பார ஊர்தி (லொறி) உடன் விற்பனைக்கு உண்டு.
சிற்றி ஹாட்வெயார்
55, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

STUDY in EUROPE
செங்கன் நாடுகளில் கல்விகற்க
100% VISA உத்தரவாதம்
நூற்றுக்கும் மேலான வீசாக்களை பெற்றுக்கொடுத்து சாதனை....
STUDY in CANADA
மேல் மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS (ACADEMIC) வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
நேரில் வந்து இலவச சட்ட ஆலோசனைகளை கேட்டு, வளமான எதிர்காலத்தை எட்டிப்பிடிக்க.
WEC COLLEGE
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் (ஆரியகுளம், யாழ்ப்பாணம்)
0779265447, 0217200989
கிளை அலுவலகம்: இல:377 சங்கத்தானை சாவகச்சேரி

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

டுபாய் வேலைவாய்ப்பு
அரசாங்க வேலைத்தளம்
மெக்கானிக் சம்பளம் 82,800 - 207,000/-
வாகன எஞ்சின் & கியர், மோட்டார் சைக்கிள், வாகன வயறிங், ரயர் டெக்னீஷியன், சேர்விஸ்
ஆரம்பக் கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ 200/- மட்டுமே
077 00 38 215
021 222 00 11
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
221-1/1 மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk

உலகின் எந்த மூலையிலும் உங்களுக்காக ஒரு தொழில்
டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, கனடா
Work Visa & Student Visa ஏற்பாடுகளுடன்
ஹொட்டேல் முகாமைத்துவம்
Tourism & Hospitality Management (3 மாதம்)
பயிற்சி, முன்னனுபவம் உள்ளவர்களுக்கு
உடனடி வேலைவாய்ப்பு!
Kitchen Helper, Steward, Waiter, Supervisor, Housekeepers, Sandwich Maker, Barista, Commis I, II, III & Chef
சம்பளம் : Rs.47,000/- முதல் Rs. 577, 458/-
வேலைவாய்ப்பு விபரங்களை நேரில் பார்த்து விண்ணப்பிக்கலாம்
SIKARAM ACADEMY
Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
Sri Lankan Enterprenuer of the Year 2017
0777 324 004
021 222 00 11
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.sikaram.lk
Sikaram Academy

# மரண அறிவித்தல்



தோற்றம் 1971 . 05 . 01

மறைவு 2018 . 12 . 04

## திருமதி கௌசலா இராகவன்

### (ஆசிரியை - உடுவில் மான்ஸ் ம.வி)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌசலா இராகவன் கடந்த 04.12.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசா - பவளமலர் தம்பதிகளின் அன்பு மகளும் நடராசசுந்தரம் - றோஸ்லின் ஜெயமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும் இராகவனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வட மாகாணம்) அன்பு மனைவியும் துஷாகரன், ஜெயதாரணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜித்தா (ஆசிரியை - நீர்/தோப்பு றோ.க.த.ம), சுகிர்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சதீஸ்குமார் (IPZ, Katunayake), றியன்சி (ஜேர்மனி), இராகுலன் (லண்டன்), ரகுநாத் (பிரதி அதிபர் - யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ரமணன் (நெதர்லாந்து), மேனகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - உடுவில்) ஆகியோரின் மைத்துனியும் டெவின் சந்தோஷ், றொபினா நித்திக்கா, ஸ்பிநோஸ், பியன், விதுர்ஷனா, பிரணவன், சஷானா, கௌதமன், தனேஸ்வர், கார்த்திகன், ஹரிஸ், அபிநாவ், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4628)

8/7, ஆர்க் வீதி, உடுவில்.

தகவல்:- குடும்பத்தினர்
077 336 4337, 077 116 3338

# வர்த்தக நிலையத்...

வியாழக்கிழமை உடுப்பிட்டி நாவலடி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கி ருந்த தொலைக்காட்சி பெட்டி, மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடியதுடன் அவர்கள் தப்பிச் செல்லும் போது பொலிஸாரின் மோப்ப நாய் மோப்பம் இடாதவாறு மிளகாய்த்தூள் பைகளை பிரித்து கொட்டிவிட்டு சென்றுள்ளனர். இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

சிங்கள மொழி கற்பிக்கப்படும்
தனியாகவும் குழுவாகவும் தனியார் கல்வி நிலையங்களிலும் பேச, எழுத, வாசிக்க பட்டதாரி ஆசிரியரால் சிங்கள மொழி கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0756642561

வேலையாட்கள் தேவை
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கார், ஆட்டோ, வான் ஆகிய வாகனங்கள் திருத்துமிடத்திற்கு (கராஜ்), Auto A/C, Tinker (ரிங்கர்), Painter (பெயின்ரர்), Wireing (வயறிங்), Machanic (மெக்கானிக்) போன்ற வேலைகள் தெரிந்த அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. தகைமை உடையவர்கள் கிராம அலுவலரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும் உங்கள் சான்றிதழ்களுடனும் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.
Sunjey's A-Z Mart
No : 102, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
(C-4612)

வேலை ஆட்கள் தேவை
● யாழ்ப்பாணம் அரசடி வீதியில் அமைந்துள்ள சுப்பர் மாக்கற் இல் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. உங்கள் சுயவிபரக்கோவையுடன் பிற்பகல் 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும். அனுபவம் உள்ளவர்களுக்கும் மும்மொழி தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
முக்கிய குறிப்பு:- அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
● AD தர வாகன அனுமதிப்பத்திரம் உடைய சாரதி தேவை. (கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.)
● வீட்டுத்தோட்ட வேலைகள் செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. (தனியாகவோ அல்லது குடும்பமாகவோ தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.) கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.
Sanjeys A-Z Mart,
No-100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
(C-4619)

ஞாயிறு முதல் வெளி வருகின்றது!
தரம் 5 புலமைப்பரிசில் - 2019
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களைக் கொண்ட தொடர் பரீட்சை வினாத்தாள்
"புலமைச்சிட்டு"
(நாவலர் வெளியீடு)
1ஆவது பரீட்சை - 09.12.2018 (ஞாயிறு)
ஞாயிறு தோறும் விரும்பிய 6 நேரங்களில் பரீட்சை

| காலை | மாலை |
|---|---|
| 8.00 - 10.00 | 2.00 - 4.00 |
| 9.00 - 11.00 | 3.00 - 5.00 |
| 10.00 - 12.00 | 4.00 - 6.00 |

பரீட்சை நடைபெறும் இடம் :- புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
● வெளிமாணவர்களும் பரீட்சைக்கு தோற்ற முடியும்
● இப்பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகள்.
● வினாத்தாள் தேவையான பெற்றோர், கல்விநிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் -தொடர்புகளுக்கு T.P - 077 459 8440
(C-4618)

Study in ITALY
Full Scholarship
ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு
Admission open for 2019 Intake
Why Study in ITALY ?



★ Bachelors & Master Degree
★ Study in English Medium
★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
★ 100% விசா உத்தரவாதம்.
★ குறைந்த பாட நெறி கட்டணம்
★ Dependent visa to spouse
★ Schengen visa
(C-4639)
iCS Study Abroad
Admissions :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் 021 492 6222
107 B 1/1, Galle Road, Colombo 6

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.